பக்கங்கள்:-28

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 24 | வெள்ளிக்கிழமை | 08.03.2024 | அதிர்வு 220

## அச்சுறுத்தல்களுக்கு அடிபணியமாட்டோம்

**நாமல் எம்.பி. சூளுரை**



"அச்சுறுத்தி எமது அரசியல் பயணத்தைத் தடுப்பதற்குச் சிலர் முற்படுகின்றனர்.

06




### தாய், 4 பிள்ளைகள், உறவினர் என

# இலங்கையர்கள் அறுவர் கனடாவில் சுட்டுக்கொலை

### தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

கனடாவில் இலங்கையைச் சேர்ந்த 6 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இலங்கைப் பிரஜையான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் அந்நாட்டுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

06

## தென்னிலங்கை அரசியலில் குவிந்து வரும் கூட்டணிகள்

**முதலில் எந்தத் தேர்தல் என்று அனைவர் மத்தியிலும் கேள்வி**



இலங்கை அரசியலில் என்றுமில்லாதவாறு இம்முறை கூட்டணிகள் உதயமாகி, அரசியல் களத்தில் குவிந்து வருகின்றன. தேசிய மட்டத்திலான தேர்தலை இலக்குவைத்தே இதற்கான நகர்வுகள் இடம்பெற்று

06



தென்னிலங்கையில் கடந்த இரண்டு தினங்களில் அரசியல்வாதிகள் வெளியிட்ட மூன்று புத்தகங்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன.

ஒன்று – 'ஜனாதிபதிப் பதவியில் இருந்து என்னை அகற்றுவதற்கான சதி!' என்ற தலைப்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய புத்தகம் நேற்று வெளியானது. பரபரப்பான விற்பனை என்றார்கள்.

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally






# ஜனாதிபதியை கேலிச்சித்திர கலைஞர்கள் நோக்கிய விதம் தொடர்பில் நூல் வெளியீடு

கடந்த காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வகிபாகத்தை நாட்டின் கேலிச்சித்திரக் கலைஞர்கள் சித்தி ரித்த விதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்தன 'Press Vs. Prez' என்ற நூலாக வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பு தாமரை தடாக கலையரங்கத்தில் இந்த நூல் வெளியிடப்பட்டது.

இவ்வாறான தொகுப்புகள் ஜனநாயகத்தின் ஓர் அங்கமா கும் எனவும், அதனால் நாட்டில் சுதந்திரம் நிலைநாட்டப்பட் டுள்ளமையை உறுதி செய்ய முடிந்துள்ளதாகவும் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வாதிகார ஆட்சியில் இவ்வாறான படைப்புகள் ஒருபோ தும் பிறக்காது என்றும், குற்றவியல் அவதூறு சட்டத்தை நீக்கியமை குறித்து பெருமையடைகிறேன் எனவும் ஜனாதி பதி மேலும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அரசாங்கம் சிரமப்பட்டு முன்னெடுத்த வேலைத்திட்டங்களினால் நாட்டின் பொருளாதாரத்தைச் சாதகமான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளதாகவும், ஒரு நாடாக நாம் இக்கட்டான காலத்தின் கடைசி பகுதியில் இருக்கிறோம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இக்கட்டான காலத்தில் மனதிற்கு மகிழ்ச்சி அளித்த, இந்தக் கேலிச்சித்திர படைப்புகள் அனைத்தையும் உருவாக்கிய படைபாளிகள் அனைருக்கும் ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 9 ஆவது நாடாளு மன்ற உறுப்பினராக 2021 ஜூன் 23 ஆம் திகதி பதவியேற் றதிலிருந்து, மே 2023 வரையிலான அவரது பயணம் குறித்து, நாளிதழ்களில் வெளியான 618 கேலிச்சித்திரங்கள் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்த நூலின் முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பி னர் வஜீர அபேவர்தன ஜனாதிபதிக்கு வழங்கிவைத்தார்.

அத்துடன், 40 கேலிச்சித்திர கலைஞர்கள் மற்றும் 20 ஊடகவியலாளர்கள் இந்த படைப்புக்குப் பங்களிப்புச் செய்துள் ளனர். அவற்றை தொலைக்காட்சியின் ஊடாக வெளியிட்ட கலைஞர்களுக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் இந்திய புகழ்பெற்ற கேலிச்சித்திர கலைஞர் நள பொன்னப்பா சிறப்பு விருந்தி னராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் ரொஹான் நெட்டசிங்கவால் நூல் பற்றிய விமர்சன விரிவுரையை நிகழ்த்தப்பட்டது.


















# சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் இலங்கையின் அர்ப்பணிப்பு பாராட்டப்படத் தக்கது

## நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பைப் பாராட்டுகின்றோம். அத்தகைய அர்ப்பணிப்புக்கள் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தும்."

– இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இலங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதால், அதன் பிரதிபலன்களை காண முடிந்துள்ளதாகவும் பீட்டர் ப்ரூவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்பணிப்புக்கும் பாராட்டுக்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது நாட்டை பொருளாதார சரிவிலிருந்து மீட்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அங்கீகரிப்பதானது இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்காக ஏற்றுகொள்ளப்பட்ட கூட்டு முயற்சியை வலியுறுத்துவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மை, கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள், எதிர்கால நோக்குத் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் பலதரப்பட்ட விடயப்பரப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்காகவும் நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் இரு தரப்புக்கும் இடையேயான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, பணிக்குழாம் பிரதானி அலுவலகத்தின் பணிப்பாளர் ஷிரந்த ஹேரத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் பிரதி தலைவர் கத்யா ஸ்விரிட்சென்கா, வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான், சோபியா ஜாங், சந்தேஷ் துங்கனா,ஹோடா செலிம், டிமிட்ரி ரோஸ்கோவ், மார்க் எடம்ஸ், ஹுய் மியாவோ, சம்ஸன் குவாலிங்கனா மற்றும் மானவீ அபேவிக்ரம உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியக் குழுவின் உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.











# திருத்தப்பட்ட மின்சார சபைச் சட்டமூலம் ஏப்ரலில் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படும்

## மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்



**"திருத்தம் செய்யப்பட்ட மின்சார சபைச் சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, அமைச்சரவையின் அனுமதிக்குப் பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படும்"**

**- இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"2024 மார்ச் 5ஆம் திகதி நள்ளிரவு முதல் மின்சார கட்டணத்தை 21.9 வீதத்தால் குறைக்க முடிந்தது. 30 அலகுகளுக்கு குறைவான மின் பாவனையாளர்களின் மின் அலகு ஒன்றுக்கான விலை 33 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. 31 - 60 அலகுகளுக்கு இடையிலான பாவனையாளர்களுக்கு அலகு ஒன்றுக்கு 28 வீதத்தால் கட்டணம் குறைந்துள்ளது. 60 – 90 அலகுளுக்கு இடையிலான பாவனையாளர்களுக்கு 30 வீதம் கடடண குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் 90 – 180 இடையிலான பாவனையாளர்களுக்கு 24 வீதத்தால் கட்டணக் குறைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், 180 அலகுகளுக்கு மேலான வீட்டு பாவனையாளர்களுக்கு 18 வீதக் கட்டண குறைப்பும் வழிபாட்டுத் தலங்களுக்கு 33 வீத கட்டண குறைப்பும் ஹோட்டல் மற்றும் தொழில் துறை துறைகளுக்கு 18 வீதக் கட்டண குறைப்பும் அரச துறைக்கு 23 வீதக் கட்டண குறைப்பும் தனியார் துறைக்கு 22 வீதக் கட்டண குறைப்பும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் அதற்கு நிகராக உணவு விலைகள் குறைக்கப்பட்டுள்ளனவா என்பது கேள்விக்குறியாக உள்ளது. பொது சேவைகளில் ஈடுபடுவோரால் மக்களுக்கு பெருமளவான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். அதனை மின்சார சபையோ அல்லது அமைச்சுக்களோ செய்ய முடியாது என்பதே எனது நிலைப்பாடாகும்.

மேலும், அண்மைக் காலமாக கிடைத்த பெரும் மழைவீழ்ச்சியின் காரணமாக, மின் உற்பத்தி செயல்பாட்டில் உள்ள பிரச்சினை குறைந்துள்ளன. அதன் பலனாக 2022ஆம் ஆண்டின் 270 பில்லியன் ரூபா இழப்பீட்டையும் அதனால் சரிசெய்ய முடிந்தது. இருப்பினும் இருள் யுகத்தில் கிடந்த நாடு பொருளாதார முன்னேற்றம் கண்டு வருவதன் பலனாகவே மின்சார கட்டணத்தை குறைக்க முடிந்துள்ளது.

அதனால் மின்சார உற்பத்திச் செலவு பெருமளவில் குறைவடைந்துள்ளதோடு, அதேபோலு மூன்றிலக்க பெறுமதியாக காணப்பட்ட வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளமையும் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும், இந்தியக் கடனின் கீழ் பெறப்பட்ட 100 மில்லியன் டொலர்களில் முதல் பகுதியைக் கொண்டு, பாடசாலைகள், பாதுகாப்பு முகாம்கள், பல்கலைக்கழகங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொது இடங்களில் மின்சாரம் பெறுவதற்கு சூரிய சக்தி படலங்களை வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம். மின் கட்டணத்தை மேலும் குறைக்க, தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் அல்லது தற்போது அதிக விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்வதை விடுத்து குறைந்த செலவிலான மாற்று முயற்சிகளுக்குச் செல்ல வேண்டும்.

2025 ஆம் ஆண்டில் சியாம்பலாண்டுவ மின் உற்பத்தித் திட்டத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதனால் நூறு மெகாவோட் மின்சாரத்தை 25 – 26 ரூபாவுக்குப் பெற்றுகொள்ள முடியும். இதேபோன்ற பல பாரிய மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். அதற்காக ஏராளமான முதலீட்டாளர்கள் எம்மோடு இணைந்துகொண்டுள்ளனர்.

மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புதிய முதலீட்டாளர்களுக்காக 10 காற்றாலை மற்றும் சூரிய ஒளி திட்டங்கள் திறக்கப்பட்டுள்ளன. மன்னார் பகுதியை மையமாக கொண்டு 50 மெகாவாட் காற்றாலைக்கான விலைமனு அடுத்த வாரம் கோரப்படும்.

மேலும் உரியவர்களுடன் கலந்துரையாடி எரிபொருள் விலைச்சூத்திரத்திற்கு அமைவாக எரிபொருள் விலையினையும் மேலும் குறைக்க எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான வர்த்தமானி கடந்த டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது. இதன்படி, புதிய சட்டத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் மாற்றங்களை உரிய தரப்பினரும், அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கத்தினரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பான 46 திருத்தங்களுடன் கூடிய சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்க முடியும்." – என்றார்.

# 4 வயது சிறுவன் விபத்தில் மரணம்

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – நுரைச்சோலை, பூலாச்சேனை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

நுரைச்சோலை – பூலாச்சேனை பகுதியைச் சேர்ந்த முஹம்மது சஹீர் சகி முஹம்மது எனும் 4 வயது சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சிறுவன் பயணித்த சைக்கிளும், டிமோ பட்டா வகையைச் சேர்ந்த லொறியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுக்கு முன்பாக தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன், தனது சிறிய சைக்கிளை எடுத்துக்கொண்டு வீதிக்கு வந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவனை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அந்தச் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## கொழும்பு கஜிமாவத்தை வீட்டுப் பிரச்சினை:

# வீடற்றவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு கஜிமாவத்தையில் வசிக்கும் அனைத்து வீடற்ற குடும்பங்களுக்கும் வீடுகளை வழங்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் வீடுகள் வழங்கும் கொள்கைகள் மற்றும் அளவுகோல்களுக்கு அமைவாகவே இப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்தார்.

கொழும்பு கஜிமாவத்தை வீட்டுப் பிரச்சினை தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கொழும்பு மாநகரப் பகுதிக்குள் அரசாங்கத்திற்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாத கட்டடங்கள் மற்றும் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து அந்தக் காணிகளை அபிவிருத்தி செய்து வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அரச துறையின் தலையீட்டுடன் தனியார் முதலீடுகள் ஊடாக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கொழும்பு நகர எல்லையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும், அரசாங்க வீடமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ஆராய்ந்தார். மேலும் வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி விளக்கினார்.

அத்துடன், தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் இந்தப் பணிகள் சிரமமானதாக இருந்தாலும் பொருத்தமான முறைமையைத் தயாரிக்குமாறு அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. சத்தியானந்த, கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன மற்றும் துறைசார் நிறுவன அதிகாரிகள் பங்கேற்றனர்.











## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'உலகிலிருந்து பல்லாயிரம் தமிழர்களை அகற்ற அவர் தலைமையில் வைக்கப்பட்ட உலை!' என்ற தலைப்பில் ஒன்றை எழுதத் தொடங்கினால் புத்தகம் புத்தகமாக – அத்தியாயங்கள் அத்தியாயங்களாக – எழுதலாம். தமிழர் தேசத்தை மூடிய இரும்புச் சட்ட(கு) இருட்டறைப் பிடிக்குள் அடக்கி வைத்துக் கொண்டு, வெளியுலகுக்குத் தெரியாமல் அவர் நடத்திய இனவழிப்புக் கொடூரத்துடன் ஒப்பிட்டால் அவரது பதவியிழப்பு அனுபவம் சமுத்திரத்தின் முன்னால் கிடக்கும் ஒரு சிறு துளிதான்.

ஆனாலும் அவரின் புத்தகம் தென்னிலங்கையில் பரபரப்புதான்.

அடுத்த புத்தகம் – 'PRESS vs PRES (அச்சு ஊடகம் எதிர் ஜனாதிபதி). கடந்த மூன்று ஆண்டுகளாக ரணில் விக்கிரமசிங்க குறித்து வெளியான கேலிச்சித்திரங்களின் தொகுப்பு அது.

மூன்றாவது – ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதிய – 'என் கதை' என்ற நூல்.

நமது தமிழ் அரசியல்வாதிகள்தான் எழுதுகின்றார்கள் இல்லை. எழுதினால் எல்லாப் பக்கங்களிலும் சுவாரசியத்துக்குப் பஞ்சம் இருக்காது என்று நம்பலாம்.

\+ \+ \+

நாடாளுமன்ற செய்தியாளர் தந்த தகவல் இது:–

நேற்று முன்தினம் போல நேற்றும் நாடாளுமன்ற கன்ரீனில் மதிய உணவு வேளை சிறீதரன் எம்.பியும் சுமந்திரன் எம்.பியும் ஒரே மேசையில் அமர்ந்திருந்து உரையாடியபடி, உணவு அருந்திக் கொண்டிருந்தனர். தமிழரசுக் கட்சியின் தற்போதைய நெருக்கடி – பிரச்சினை – குறித்து இருவரும் ஒரு சொல் கூட தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளவில்லை. பேச்சு விடயம் ரணிலின் அரசியல் நகர்வு பற்றியதாக இருந்திருக்கலாம்.

அப்போது மனோ கணேசன் எம்.பி. அங்கு வந்தார்.

"ஓ! இரண்டு பேரும் ஒன்றாகவா இருக்கின்றீர்கள்? இங்கேயே பிரச்சினைளைப் பேசி முடித்துக் கொள்ளலாமே...!" – என்றார் மனோ கணேசன்.

"ஓ முடிக்கலாம். அதற்குப் பிரச்சினை என்னவென்று தெரிந்தால்தானே பேசுவதற்கு." – என்றார் சுமந்திரன். சிறீதரன் பதில் ஏதும் சொல்லவில்லை.

அதற்கு மேல் என்ன பேசுவது என்று தெரியாமல் அங்கிருந்து நகர்ந்தார் மனோ கணேசன்.

சற்று நேரத்தில் அந்தப் பக்கம் வந்தார் மனோ கணேசன் அணியை சேர்ந்த மற்றொரு எம்.பியான இராதாகிருஷ்ணன்.

"ஓ, தமிழரசின் இரண்டு தலைவர்களும் இங்கேயா ஒன்றாக இருக்கின்றீர்கள்..?" – என்று கேள்வி எழுப்பினார் அவர்.

"இல்லையே... எங்கள் தமிழரசுக் கட்சிக்கு இரண்டு தலைவர்கள் இல்லையே... ஒரு தலைவர்தான்!" – என்று சடாரெனப் பதிலளித்தார் சுமந்திரன்.

அந்த ஒரு தலைவர் யார் என்பதை இராதாகிருஷ்ணனும் கேட்கவில்லை, சுமந்திரனும் தெளிவுபடுத்தவில்லை.

சுமந்திரன் குறிப்பிடும் அந்த ஒரு தலைவர் யார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் வாசகர்களே...? பதிலையும் உங்கள் அனுமானத்துக்கே விட்டுவிடுகிறேன்.

இந்தத் தகவல்கள் வாசகர்களின் வாசனைக்கு ஒரு நொறுக்குத் தீனி. அவ்வளவுதான்...!

## அச்சுறுத்தல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து தீர்மானம் எடுக்கும் அணி அல்ல எமது கட்சி."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பதில் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"அச்சுறுத்தல் மூலம் அரசியல் பயணத்தைத் தடுக்கலாம் எனச் சிலர் நினைக்கின்றனர். 2022 மே 9 ஆம் திகதியும் அந்த முயற்சி எடுக்கப்பட்டது. அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தீர்மானம் எடுப்பவர்கள் அல்லர் நாம். மஹிந்த ராஜபக்ஷ காலத்திலும் அவ்வாறு முடிவெடுக்கவில்லை. இனியும் எடுக்கப்போவதும் இல்லை.

வெற்றிகரமான அரசியல் முடிவுகளையே எடுப்போம். அடுத்து எந்தத் தேர்தல் என்பது எமக்குத் தெரியாது. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் எனக் கூறுகின்றனர். எது எப்படி இருந்தாலும் வெற்றிகரமான ஆட்டத்தையே நாம் ஆடுவோம். அதற்கேற்ற வகையில் அரசியல் முடிவுகளை எடுப்போம்." – என்றார்.

## இலங்கையர்கள் அறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடாவின் ஒட்டாவா புறநகர்ப் பகுதியான பார்ஹேவனில் உள்ள ஒரு வீட்டில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் தாய், அவரது நான்கு குழந்தைகள் மற்றும் அக்குடும்பத்தின் உறவினர் ஒருவர் என அறுவர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தந்தை படுகாயங்களுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் ஒட்டாவா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான குடும்பத்தினர் அண்மையில்தான் இலங்கையிலிருந்து கனடாவுக்கு வந்துள்ளனர் என்றும் ஒட்டாவா பொலிஸார் கூறியுள்ளனர்.

35 வயதான தர்ஷனி பண்டார நாயக்க கம வல்வே தர்ஷனி டிலந்திகா ஏகநாயக்க மற்றும் அவரது பிள்ளைகளான இனுகா விக்கிரமசிங்க (வயது 07), அஷ்வினி விக்கிரமசிங்க (வயது 04), றின்யான விக்ரமசிங்க (வயது 02) மற்றும் இரண்டு மாதங்களேயான கெல்லி விக்கிரமசிங்க ஆகியோரும், 40 வயதான அமரக்கோன் முதியான்சேலா ஜீ காமினி அமரக்கோன் என்பவரும் சம்பவத்தில் சாவடைந்துள்ளனர்.

அமரக்கோன் முதியான்சேலா ஜீ காமினி அமரக்கோன் என்பவர் அந்தக் குடும்பத்தின் உறவினர் என்றும், வீட்டில் வசித்து வந்ததார் எனவும் கூறப்பட்டது.

பெண்ணின் கணவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

19 வயதான வெப்பிரியோ டீ சொய்ஸா என்பவரே மேற்படி சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் இலங்கைப் பிரஜை என்றும், அவர் கனடாவில் மாணவனாக இருந்தார் என்றும் ஒட்டாவா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கொலைக்கான காரணம் இன்னமும் தெரியவரவில்லை.

## தென்னிலங்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றன. மறுபுறத்தில் கட்சி தாவுதல், காலைவாருதல், குதிரைப் பேரம் எனத் தேர்தல் காலத்துக்கே உரித்தான சம்பவங்களும் அரங்கேறிவ ருகின்றன. இதனால் தெற்கு அரசியல் நாளுக்கு நாள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

முதலில் நடைபெறும் தேர்தல் எது என்பதே அனைவர் மத்தியிலும் தற்போது எழுந்துள்ள மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

அரசமைப்பின் பிரகாரம் தற்போதைய கால எல்லைக்கமைய ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் எதை வேண்டுமானாலும் முதலில் நடத்தக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதமே ஜனாதிபதித் தேர்தல் கடைசியாக நடத்தப்பட்டது. ஜனாதிபதிக்குரிய பதவிக் காலம் ஐந்தாண்டுகள் என்பதால் 2024 செப்டெம்பர் 18 மற்றும் ஒக்டோபர் 10 இற்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

2025 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்து தீர்மானமொன்றை நிறைவேற்றும் பட்சத்தில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியும்.

நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் இரண்டரை வருடங்களைக் கடந்துள்ளதால் இதற்குச் சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லை. ஆனால், முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் கூட ஜனாதிபதித் தேர்தலையும் ஒக்டோபர் மாதத்துக்குள் நடத்தியாக வேண்டும். ஆக முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் குறுகிய காலப்பகுதிக்குள் இரண்டு தேசிய தேர்தல்களை இலங்கை மக்கள் சந்திக்க நேரிடும்.

ஜனாதிபதித் தேர்தலுக்குத்தானே வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாதல் அதற்கு நிதி எப்படி என்ற கேள்வியும் எழக்கூடும். நாடாளுமன்றத்தில் குறைநிரப்பு பிரேரணையொன்றை நிறைவேற்றி அதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடும் உள்ளது.

இரண்டு தேர்தல்களையும் இலக்காகக் கொண்டு சஜித் பிரேமதாஷா தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி, கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளையும், அமைப்புகளையும், தனிநபர்களையும் அதிகரிப்பதற்கான நகர்வுகளில் முழுவீச்சுடன் செயற்பட்டு வருகின்றது.

மறுபுறத்தில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் தமது கூட்டணியை விஸ்தரித்தே ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள உத்தேசித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்கான நகர்வுகளில் ஈடுபட்டு வருகின்றது. வரலாற்றில் மிகப்பெரிய கூட்டணி இம்முறை உதயமாகும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

நிமல் லான்சா, சுசில் பிரேமஜயந்த உட்பட மொட்டு கட்சியில் இருந்து விலகிய சில எம்.பிக்கள் இணைந்து புதிய கூட்டணி எனும் பெயரில் கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளனர். இந்தக் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமிக்கும்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியும் பரந்துபட்ட கூட்டணிக்கான அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதற்கான பொறுப்பு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பிக்க ரணவக்க தலைமையிலும், மைத்திரிபால சிறிசேன தலைமையிலும், விமல் வீரவன்ஸ

07▶

# ஒரு கோடி ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கு கடத்தி வந்த தேரர் உட்பட இருவர் மடக்கிப் பிடிப்பு



(கனகராசா சரவணன்)

மாத்தறையில் இருந்து மட்டக்களப்புக்கு விற்பனைக்காகக் கடத்திக் கொண்டுவரப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியன வலம்புரிச் சங்கு ஒன்றுடன் பௌத்த தேரர் ஒருவர் உட்பட இருவரை நேற்றிரவு மட்டு. கல்குடா பிரதேசத்தில் வைத்து விசேட அதிரடிப் படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

தாண்டியடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து விசேட அதிரடிப் படையின் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய அம்பாறை – மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் வாவிடவிதானவின் வழிகாட்டலின் கீழ் தாண்டியடி விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்றிரவு கல்குடா தபால் கந்தோருக்கு அருகாமையில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தநிலையில் அங்கு பௌத்த தேரர் உட்பட இருவர் வலம்புரிச் சங்கு ஒன்றை விற்பனைக்காகக் கடத்தி வந்ததை அவதானித்த விசேட அதிரடிப் படையினர் அவர்களைச் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்து கைது செய்ததுடன் ஒரு கோடி ரூபா பெறுமதியான வலம்புரி சங்கு ஒன்றையும் மீட்டனர்.

கைதான இருவரும் சான்றுப் பொருளான வலம்புரிச் சங்குடன் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர் என்றும், இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் இன்று சிவ தீட்சை வழங்கல்

(த.சுபேசன்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சிவ தீட்சை வழங்கப்படவுள்ளது.

சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் இதனைத் தெரியப்படுத்தியுள்ளார்.

சிவதீட்சை பெற விரும்புவோர் 0777197067 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளலாம். உரிய நேரத்தில் ஆலயத்தின் திருவாசக மடத்துக்கு வருகை தந்து கிரிகைகளில் பங்குபற்றி சிவதீட்சையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தீட்சாகுருவாக சைவாகம பூசணம், சத்தி கிரியா குருமணி சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள் செயலாற்ற உள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர்.

## சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் உயர்வு




சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலங்களில் பதிவான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நெருங்கிய உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் 1,618 முறைப்பாடுகளும், 2023 ஆம் ஆண்டில் 1,639 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, உரிய தெளிவுப்படுத்தல்கள் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க முடியும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தென்னிலங்கை..

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையிலும், ரொஷான் ரணசிங்க தலைமையிலும் ஏற்கனவே கூட்டணிகள் உதயமாகியுள்ளன.

இவ்வாறு இலங்கை அரசியலில் கூட்டணிகள் குவிந்தாலும், முதலில் ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறும் பட்சத்தில் அதில் மும்முனைப்போட்டியே நிலவக்கூடும். மேற்படி கூட்டணிகளில் சில தரப்புகள் பிரதான வேட்பாளர்கள் பக்கம் சாயக்கூடும்.

1994, 1999, 2005, 2010, 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது பிரதான கட்சிகள் கூட்டணி அமைத்தே களம் கண்டுள்ளன. சிறு கட்சிகள் அவற்றின் முதுகில் அரசியல் சவாரி செய்யும் போக்கே காணப்படுகின்றது. ஏனெனில் பிரதான கட்சிகளுடன் கூட்டு வைத்தால்தான் நாடாளுமன்றத் தேர்தலில் (விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ்) பாரிய சவால்கள் இன்றி நாடாளுமன்றம் தெரிவாகும் சூழ்நிலைக் காணப்படுகின்றது.

இலங்கையில் இதுவரை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது பிரதான இரு வேட்பாளர்களில் ஒருவர் , செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துக்கும் மேல் பெற்று வெற்றிபெற்றுள்ளார். இதனால் 2ஆவது விருப்பு வாக்கை எண்ணுவதற்குரிய சூழ்நிலை உருவாகவில்லை.

எனினும், இம்முறை அரசியல் களம் மாறுபட்ட கோணத்தில் காணப்படுகின்றது. 3 சதவீத வாக்குகள் என முத்திரை குத்தப்படும் தேசிய மக்கள் சக்தி எழுச்சி பெற்றுள்ளதையும், அதன் வாக்குவங்கி அதிகரித்துள்ளதையும் பிரதான கட்சிகள் கூட வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கையில் ஏனைய தேர்தல்களைப் போல அல்லாமல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூவருக்கு விருப்பு வாக்குகளைப் பயன்படுத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்குத் தொழிலாளர் தேசிய முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி என்பன அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தற்போது அரச பங்காளிக்கட்சியாக உள்ளது. ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு நேசக் கரம் நீட்டியுள்ளது. எனினும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னும் அக்கட்சி முடிவெடுக்கவில்லை. மாவட்ட மட்டத்திலான கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. எப்போதும் வெற்றிக் குதிரைக்கே பந்தயம் கட்டும் என அரசியல் களத்தில் விமர்சிக்கப்படும் காங்கிரஸ், பிரதான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின்னரே முடிவை அறிவிக்கும் எனத் தெரியவருகின்றது.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டிருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு வங்கி உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தென்னிலங்கையில் பிரதான வேட்பாளர் ஒருவரையே ஆதரிக்கக்கூடும் என அறியமுடிகின்றது.

சிலவேளை முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால்கூட சிலவேளை நான்கு முனைப் போட்டி நிலவக்கூடும். அவ்வாறு நடந்தால் தொங்கு நாடாளுமன்றம் உருவாகக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மகளிர் நாள் சிந்தனை

இன்று மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம். 1910 இல் கோப்பன்ஹெகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில்தான் சர்வதேச மகளிர் தினம் பற்றிய பரிந்துரை வெளியானது. அதன் பிரகாரம் முதன் முதலில் 1911 இல் ஆஸ்திரேலியா, டென்மார்க், ஜேர்மன், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இது கொண்டாடப்பட்டது. அந்த வரிசையில் இன்று 113ஆவது வருட மகளிர் தினம் உலகளாவிய ரீதியில் இடம்பெறுகிறது.

சர்வதேச ஆண்கள் தினம் என நவம்பர் 19 ஐ 1990 களிலிருந்து பிரிட்டன் உட்பட்ட சில நாடுகள் பரவலாக அனுஷ்டித்து வந்தாலும் அதனை ஒரு சர்வதேச தினமாக ஐ.நா. அங்கீகரிக்கவில்லை என்பதை நோக்க வேண்டும்.

மனித சமுதாயத்தை விழுமிய நெறிமுறையில் நிலை நிறுத்திப் பேணுவதில் பெண்களின் அளப்பரிய சாதனைகள், பங்களிப்புகள், போராட்டங்கள் மற்றும் பாலின சமத்துவத்துக்கான உரிமை கோரி தளராது மேற்கொள்ளும் எத்தனங்கள், சகிப்புத்தன்மை, அரவணைப்பு, சமூக வழிகாட்டல், பொறுப்பான நடத்தை போன்றவற்றை அங்கீகரித்து நினைவு கூரும் நாளாக இது மிளிர்கின்றது. அதேவேளை கலாச்சாரம், அரசியல் மற்றும் குடும்பங்களில் அவர்கள் ஆற்றும் பல்வேறு துறை சார்ந்த பங்களிப்பைப் போற்றும் நாளாகவும் இது அமைகின்றது.

இந்த ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினக் கருப்பொருள் இரண்டு வாசகங்களில் முன்வைக்கப்படுகின்றது.

ஒன்று - 'பெண்களில்முதலீடு செய்யுங்கள்; முன்னேற்றத்தை விரைவுப்படுத்துங்கள்!' என்பதாகும். அதாவது, பெண்களை நம்பி, அவர்களில் தங்கி சமூகத்தை வழிப்படுத்துங்கள் என்ற செய்தி அதற்குள் பொதிந்து கிடக்கின்றது.

அடுத்தது - 'சேர்த்தலை ஊக்குவியுங்கள்!' அதாவது அனைத்து அம்சங்களிலும் பெண்களின் பன்முகத்தன்மையை அங்கீகரித்து, அதிகாரம் அளித்து, சமத்துவமாக அவர்களைச் சேர்த்துக் கொள்வதை உறுதிப் படுத்துங்கள் என்பதாகும்.

பெண்களின் சாதனைகள் மற்றும் சமூகத்திற்கான பங்களிப்புகளை கௌரவிக்கவும், பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சர்வதேச மகளிர் தினம் முக்கியமானதாகின்றது.

பெண்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அங்கீகரித்து, இன்னும் இருக்கும் சவால்களை முன்னிலைப்படுத்த இது ஒரு நல்ல நாள் ஆகும்.

பெண்களின் சமூகம், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும், உலகளவில் பாலின சமத்துவத்தை அடைய தொடர்ந்து நடவடிக்கை எடுக்க அழைப்பு விடுப்பதற்கும் இந்த நாள் ஒரு சிறந்த வாய்ப்பாக அவர்களுக்கு அமையும்.

பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுதல், பெண்களின் சமத்துவத்திற்கான கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பெண்களை முன்னேற்றுவதற்கான நேர்மறையான மாற்றத்திற்கான அழைப்பு, துரிதப்படுத்தப்பட்ட பாலின சமத்துவத்திற்கான பரப்புரை மற்றும் பெண்களின் மையமாகக் கொண்டு தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

பாலின சமத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இந்நாளில் பலவிதமான பிரசாரங்கள் நிகழ்வுகள் பேரணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம்.

பெண்களின் கலாசார, அரசியல், சமூக மற்றும் பொருளாதார சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் நாமும் நமது சமூகமும் செயற்படுகின்றோமா எனது குறித்துச் சிந்திக்க வேண்டிய நினைவூட்டலை இந்நாள் தந்து நிற்கிறது.

பாலினச் சார்பு மற்றும் பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து, பாலின சமத்துவத்தை அடைவதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கும் வாய்ப்பாகவும் இந்த நாள் அமைகிறது.

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சமத்துவமின்மை, பாலின அடிப்படையிலான வன்முறை, கல்வி மற்றும் வரையறுக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புகள் போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தத் தினத்தைப் பயன்படுத்த வேண்டும்.

பாலின சமத்துவத்தை ஊக்குவித்து, பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் தீர்வுகளை நோக்கிச் செயல்படுவதற்கும், ஏற்படுத்த வேண்டியதை முன்னேற்ற பாதைகள் பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்கும் இந்த நாள் சரியான தருணமாகும்.

# தமிழகத்தை வஞ்சிக்காத மத்திய அரசு வேண்டும்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



“தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கக்கூடிய பல திட்டங்களை திராவிட மாடல் அரசு செய்து கொண்டிருந்தாலும், மத்திய அரசின் ஒத்துழைப்போ, நிதி உதவியோ இல்லாமல்தான் நாம் செய்து கொண்டு வருகிறோம். தமிழகத்தை வஞ்சிக்காத மாநிலங்களை மதிக்கின்ற மத்திய அரசு அமைந்தால் இன்னும் நிறைய செய்ய முடியும். அதற்கான காலம் கனிந்து கொண்டு இருக்கிறது. அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை.”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கொளத்தூரில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கலந்துகொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் முதல்வர் உரையாற்றுகையில்,

“நம்முடைய திராவிட மாதிரி அரசு என்பது மகளிர் முன்னேற்றத்துக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி, பல சாதனைகளை தொடர்ந்து புரிந்து கொண்டிருக்கிறது. நேரத்தின் அருமை கருதி ஒருசில முத்தாய்ப்பான திட்டங்களை மட்டும் இங்கே நான் பட்டியலிட விரும்புகிறேன்.விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தோழி விடுதி இப்படி ஏராளமான திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

இந்த திட்டங்களால் நீங்களும், தமிழகமும் முன்னேற்றம் அடைவதுதான் திராவிட மாடல் அரசுக்கும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கும் பெருமை. இப்படி தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கக்கூடிய பல திட்டங்களை நாம் எவ்வளவோ செய்து கொண்டிருந்தாலும், ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசின் ஒத்துழைப்போ, நிதி உதவியோ இல்லாமல்தான் நாம் செய்து கொண்டு வருகிறோம்.

தமிழகத்தை வஞ்சிக்காத மாநிலங்களை மதிக்கின்ற மத்திய அரசு அமைந்தால் இன்னும் நிறைய செய்ய முடியும். அதற்கான காலம் கனிந்து கொண்டு இருக்கிறது. அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை் தயாராகி விட்டீர்களா?” – என்றார்.

## நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம்:

# உறுப்பினர் சேர்க்கை அணியில் ஐந்து நிர்வாகிகள் நியமனம்

நடிகர் விஜய் தொடங்கியுள்ள ‘தமிழக வெற்றிக் கழகம்’ கட்சியின் உறுப்பினர் சேர்க்கை அணி உருவாக்கப்பட்டு, அதற்கான நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

“தமிழக வெற்றிக் கழகத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளை வலுப்படுத்தி வருகின்றோம். இரண்டு கோடி உறுப்பினர்கள் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளோம். இதன் முதற்கட்டமாக, உறுப்பினர் சேர்க்கை அணியை உருவாக்கியுள்ளோம்.

மகளிர் தலைமையில் முதன்முதலாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அணியினர், கட்சித் தோழர்களோடு இணைந்து, மக்களுக்கு உதவி செய்வார்கள். தமிழக வெற்றிக் கழகத்தின் உறுப்பினர் சேர்க்கை அணிக்கு ஐந்து நிர்வாகிகள் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்தப் புதிய அணி, கட்சியின் உள் கட்டமைப்பைச் சார்ந்து விரைவில் விரிவாக்கம் செய்யப்படும். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கை அணி நிர்வாகிகளுக்குக் கட்சித் தோழர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.”



என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை துணை தூதரகத்துக்கு முருகன் சென்றுவர அனுமதி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகனுக்கு கடவுச்சீட்டு பெறுவதற்கான நேர்காணலுக்காக இலங்கைத் துணை தூதரகம் சென்று வர அனுமதி வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிடக் கோரி அவரது மனைவி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில்,

“முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து உச்ச நீதிமன்றம் 7 பேரையும் விடுவித்தது. இந்த நிலையில், இலங்கை குடிமகன் என்பதால் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் எனது கணவர் முருகன் தங்கவைக்கப்பட்டுள்ளார். லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால், அனைத்து நாடுகளுக்கும் செல்வதற்கான கடவுச்சீட்டு வழங்க கோரி இருவரும் விண்ணப்பித்திருந்தோம். நேர்காணலுக்காக ஜனவரி 30 ஆம் திகதி அழைக்கப்பட்டோம்.

என்னுடைய நேர்காணல் முடிந்துவிட்டது. இந்த நேர்காணலில் கலந்துகொள்ள அனுமதிக்காததால், கணவர் முருகன், இலங்கை துணை தூதரகம் அழைத்தபோது ஆஜராக முடியவில்லை. திருச்சி முகாமில் உள்ள மோசமான சூழல் காரணமாக ஏற்கெனவே ஒரு மாதத்தில் 2 பேர் இறந்துள்ளனர். எனவே, என்னுடைய கணவருக்கு எதுவும் நடப்பதற்கு முன்பாக, நாங்கள் இருவரும் மகளுடன் சேர்ந்துவாழ விரும்புகிறோம்.

எனவே எனது கணவர் முருகன் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்று நேர்காணலில் கலந்துகொள்வதற்கான அனுமதியை வழங்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும். அங்கு சென்று வருவதற்கு பாதுகாப்பு தேவைப்படும்பட்சத்தில், உரிய பாதுகாப்பு வழங்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.எஸ்.ரமேஷ் மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கு விசாரணையில் இருந்து விலகுகிறேன் என்று நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்தார். இதையடுத்து, நளினியின் வழக்கை வேறு அமர்வில் பட்டியலிடும் வகையில் தலைமை நீதிபதியின் ஒப்புதலை பெற பதிவுத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

# ரஷ்ய ரோந்துக் கப்பல் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்




ரஷ்யாவின் இராணுவ ரோந்துக் கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தி வெற்றிகரமாக அதனை மூழ்கடித்துள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

1300 தொன் எடை கொண்ட செர்கய் கோட்டோவ் என்ற ரோந்துக் கப்பல் மீதே கருங்கடலில் வைத்துக் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கருங்கடலில் ரஷ்யாவின் கடற்படைக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் அதன் பலம் மூன்றில் ஒருபங்காக குறைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை நேரலை விவாதத்திற்கு ட்ரம்ப் அழைப்பு!



அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை நேரலை விவாதம் ஒன்றிற்கு வருமாறு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் தலைவருடன் எந்தவொரு நேரத்திலும் நேரடி விவாதத்தில் பங்கேற்க தாம் தயாராக உள்ளோம் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக நேரடி விவாதங்களில் பங்கேற்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதுவித கருத்தினையும் வெளியிடவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் அமெரிக்க குடியரசுக்கட்சியின் வேட்பாளர் போட்டியில் இருந்து இந்திய வம்சாவளியை சேர்ந்த நிக்கி ஹேலி வெளியேறியதை தொடர்ந்து டொனால்ட் ட்ரம்ப மேற்படி அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த போது ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதராக நிக்கி ஹேலி பதவிவகித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்காவில் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் ஜோபைடனுக்கு எதிராக குடியரசுகட்சியின் சார்பில் களமிறங்கவுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் - இஸ்ரேல் இடையில் சமாதான பேச்சு அடுத்த வாரம்





ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை அடுத்த வாரமும் தொடரும் என எகிப்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

4 நாள்கள் பேச்சுவார்த்தையின் பின்னர் எகிப்த்தின் கெய்ரோவில் இருந்து ஹமாஸ் தூதுக்குழு நேற்று சென்றுள்ளது.

இஸ்ரேலுடன் உடன்பாடு ஏற்படும் வரையில் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தை தொடரும்.

காசாவில் இடம்பெற்று வரும் போரை நிறைவுக்கு கொண்டுவருவதற்கு ஹமாஸ் தரப்பினரின் கோரிக்கைகள், முட்டுக்கட்டைகளை எட்டியுள்ளன.

எனவே அடுத்த வாரமும் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்டார் மற்றும் எகிப்தின் நடுநிலைமை கொண்ட தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தத்தை நிறைவுறுத்துவதற்கான இஸ்ரேலின் முயற்சிகள் தோல்வியுற்றுள்ளதாக ஹமாஸ் தரப்பின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.





# ஜனாதிபதியின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அல் முபாரக் மத்திய கல்லூரிக்கு புதிய கேட்போர் கூடம்

மல்வானை அல் முபாரக் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனைத்து வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடம் அங்கு நிர்மாணிக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார்.

அதற்கமைய கேட்போர் கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா காலநிலைமாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தனவின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இந்த கேட்போர் கூடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டதுடன், ஒரே நேரத்தில் சுமார் 5000 மாணவர்கள் ஒன்று கூடக்கூடிய சகல வசதிகளுடன் இந்த புதிய கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

புதிய கேட்போர் கூட அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ருவன் விஜேவர்தன, கடற்படையினரின் பங்களிப்புடன் கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மாணவர்களின் கல்விக்காக ரணில் விக்கிரமசிங்க அன்றிலிருந்து இன்று வரை பெரும் பங்காற்றியுள்ளார் எனவும், ஜனாதிபதி பியகம பிரதேச மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக அடுத்த மாதம் புதிய வைத்தியசாலையை நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் ருவன் விஜேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.













# சுழிபுரத்தில் திடீரென முளைத்த புத்தர் சிலை அகற்றப்பட்டது!

(ந.லோகதயாளன்)

சுழிபுரம் பகுதியில் திடீரென இரகசியதாகக் கொண்டு வந்து வைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்று இரகசியமாகவே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சுழிபுரம் பகுதியில் உள்ள சவுக்கடிப் பிள்ளையார் கோவிலடியில் ஆலயத்தின் பின்புறமாக உள்ள அரச மரத்தின் கீழ் ஒரு புத்தர் சிலை வைக்கப்பட்டதற்கு எதிராக இன்றைய தினம் காலை 10.30 மணிக்கு ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது.

அப்பகுதி கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகித்த நிலையில், புத்தர் சிலையை அடுத்து விகாரை தோற்றம் பெறலாம் எனவும் அச்சப்பட்டனர்.

இந்த நிலையிலேயே, இது தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி, அது பேசுபொருளான நிலையில் அந்தப் புத்தர் சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகப் பிரதேசவாசிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

# சிவபெருமானின் இரவைக் கொண்டாடும்போது நாட்டு மக்களிடம் ஞான ஒளி பிரகாசிக்கட்டும்!

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



சிவபெருமானின் இரவைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், நம் நாட்டுக் குடி மக்களிடம் உள்ள இருள் நீங்கி, ஞான ஒளி பிரகாசிக்கட்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சிவனுக்கு ஓர் இராத்திரி என்பதற்கு இணங்க, உலகம் முழுவதும் உள்ள இந்துக்களால் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படும் விரத தினமான மகா சிவராத்திரி இன்றாகும்.

இந்துக்கள் சிவராத்திரி தினத்தன்று விரதமிருந்து, சிவ சிந்தனையுடன் கண் விழித்திருந்து நான்கு ஜாம பூஜை வழிபாடுகளில் பங்குபற்றுவார்கள். இராத்திரி முழுவதும் விழித்திருப்பதற்காக அருகில் உள்ள சிவாலயங்கள் அல்லது ஏனைய ஆலயங்களுக்குச் சென்று ஆடல் அரசன் சிவனின் பாதங்களில் சமர்ப்பிக்கப்படும் இயல் மற்றும் இசை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதுடன், நான்கு ஜாம பூசைகளிலும் பங்கு பற்றிச் சிவனருள் பெறுவார்கள்.

இரவில் விரதம் இருந்து சிவபெருமானை வணங்கினால் மோட்சம் கிடைக்கும் என இந்துக்கள் நம்புகின்றனர்.

சிவனை வழிபட்டால் உடல், உள ஆரோக்கியம் ஏற்படுவதுடன், மரணத்துக்குப் பின்னர் மோட்ச வாழ்க்கை ஏற்படும் என்பது இந்து பக்தர்களின் நம்பிக்கையாகும்.

ஆரோக்கியமான, ஞான அறிவு கொண்ட குடிமக்களின் தலைமுறை ஒரு நாட்டுக்குப் பெருமையாகும். அது ஒரு நாட்டின் உயிர் நாடியாகும்.

சிவபெருமானின் இரவைக் கொண்டாடும் இத்தருணத்தில், நம் நாட்டுக் குடிமக்களிடம் உள்ள இருள் நீங்கி, ஞான ஒளி பிரகாசிக்க, வளமான தானியங்களும், பயிர்களும் கிடைக்க, களஞ்சியங்கள் நிரம்பி மக்களின் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும் நிறைந்த அழகான புதிய நாட்டை உருவாக்கும் சவாலை, இந்த நாட்டின் ஒட்டு மொத்த மக்களும் வெற்றி கொண்டு, தாய் நாடு வளம் பெற பிரார்த்திக்கின்றேன்.- என்றுள்ளது.

# பல லட்சம் பக்தர்கள் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி தினமான இன்று எதிர்பார்ப்பு!



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பாடல் தலமான திருக்கேதீஸ்வரத்தில் இன்று சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பல லட்சக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தி அடைந்த நிலையில் உள்ளன என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் பாடல் தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற இருக்கும் வழிபாடுகள் தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல்களுக்கு அமைவாக சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரத்துக்கு வரும் பக்தர்களுக்கு அன்னபூரணி அன்னதான தொண்டர் சபை, மகா சிவராத்திரி மட பரிபாலன சபை, இராஜகணபதி அறக்கட்டளை, மாதுவட்டான் மணி மண்டபம் மற்றும் சிவபூமி அன்னதான தொண்டர் சபை ஆகியன அன்னாதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துடன் அங்கர் பால்மா நிறுவனம், இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை வங்கி, நீர்பாசன திணைக்களம், பாலாவி சேவா சங்கம் நீர் வழங்கல் வடிகால் சபை மற்றும் கட்டடத் திணைக்களம் ஆகியன தாகச் சாந்தி வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

2015 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடங்களாக இந்த ஆலயத்தில் புனரத்தான வேலைகள் இடம்பெற்றமையால் 2022 ஆம் ஆண்டுவரை பாலஸ்தாபனம் செய்யப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று வந்தன.

2023 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு சிவராத்திரி வழிபாடுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

இந்த வருடமும் வழமைபோன்று வடக்கு பகுதியில் மட்டுமல்ல இலங்கையின் நாலா பக்கங்களிலும் இருந்து பெருந் தொகையான பக்தர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று உலக சைவப் பேரவையின் கொடிதினம்!

மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை ஏற்பாடு செய்திருக்கும் கொடிதினம் மற்றும் கொடி வாரத்தின் ஆரம்ப வைபவம் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் வைபவம் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, நந்திக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமாகும்.

இந்த வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கொடி விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அஷராத்மானந்தா மகராஜ், கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா, இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஏ. அநிருத்தனன், வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெ.சுந்தரலிங்கம், கொழும்பு கதிரேசன் வீதி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறங்காவலர் எஸ். ரகுநாதன், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் சி. தில்லை நடராஜா, உலக சைவப் பேரவை இலங்கைக் கிளையின் போஷகர் திருமதி நீலா தயாபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலய அறங்காவல் சபை தலைவர் அ. மாணிக்கவாசகர் முதலாவது கொடியைப் பெற்றுக் கொள்வார்.

ஆலய சிவாச்சாரியார்கள், உலக சைவப் பேரவை இலங்கைக் கிளையின் செயலாளர், பொருளாளர் மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் உட்பட இந்து மத அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், சைவ நலன்விரும்பிகளும், சைவ அடியார்களும் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.




# பெண்ணின் தைரியத்தையும் வலிமையையும் நாட்டை மீட்கும் உயிர் நாடியாக மாற்றலாம்!

## எதிர்க்கட்சித் தலைவரின் மகளிர் தின செய்தியில் தெரிவிப்பு

குழந்தையாக வீட்டையும், இளம் பெண்ணாக உலகையும், மனைவியாகக் குடும்பத்தையும் அழகுபடுத்தும் பெண்ணின் தைரியத்தையும் வலிமையையும், வீழ்ச்சியடைந்த நம் நாட்டை மீண்டும் முதல் நிலைக்கு மீட்டெடுக்கும் பயணத்தின் உயிர்நாடியாக மாற்ற முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இன்று மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் ஆகும். அதனை முன்னிட்டு விடுத்துள்ள மகளிர் தினச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தாயின் அரவணைப்பு, சகோதரியின் பாசம், மனைவியின் நேசம், மகளின் அன்பு என அனைத்தையும் சமமாக அனுபவிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்ததால், பெண்ணின் தைரியம், பலம், உறுதிப்பாடு எப்படி இருக்கும் என்பதை முழுமையாக புரிந்து கொண்டேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

பண்டைய காலத்தில் இருந்தே மனித குலத்தின் நிலையான இருப்பானது வலுவூட்டப்பட்ட பெண்களின் வலிமையைப் பொறுத்தாக இருந்தது என்பது நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விடயமாகும்.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 52 வீதமானவர்கள் பெண்கள். அந்தப் பெண்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29 வீதம் நேரடியாகப் பங்களிக்கின்றனர். பிறந்தது முதல் பல்வேறு வகிபாத்திரங்களை ஏற்று இந்த உலகை அழகுறச் செய்ய பெண்கள் எடுக்கும் முயற்சிகளை நாம் மறக்க முடியாது.

குழந்தையாக வீட்டையும் இளம் பெண்ணாக உலகையும்



மனைவியாக குடும்பத்தையும் அழகுபடுத்தும் பெண்ணின் தைரியத்தையும் வலிமையையும், வீழ்ச்சியடைந்த நம் நாட்டை மீண்டும் முதல் நிலைக்கு மீட்டெடுக்கும் பயணத்தின் உயிர்நாடியாக மாற்ற முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஆனால், நாடு என்ற வகையில் நாம் இன்னும் பெண்களின் தைரியத்தையும், வலிமையையும் புரிந்து கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டும்.

பாரம்பரிய கருத்துக்கள் மற்றும் அடிப்படைக் கருத்துக்களின் பேரிலேயே நாம் இன்னும் பெண்களை நோக்குகின்றோம். இந்த மனோபாவத்தில் இருந்து நாம் விடுபட வேண்டும்.

புதிய உலகுக்கு ஏற்ற அறிவு, தொழில்நுட்பம் மற்றும் பரந்த திறன்களால் பெண்கள் வலுவூட்டப்பட்டு, குடும்பம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக பெண்கள் இருக்க வேண்டும்.

வீட்டிலும், வீதியிலும், தொழில் புரியும் இடத்திலும் பெண்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க நாம் செயற்படல் வேண்டும். அப்போதுதான் உண்மையான பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.–என்றுள்ளது.

# பன்முகத் திறமைகள் கொண்ட பெண்களால் அதிக மாற்றங்கள் சமுதாயத்தில் உருவாகின!

## கிழக்கு மாகாண ஆளுநரின் மகளிர் தினச் செய்தியில் தெரிவிப்பு

இந்த நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் முன்பும் பின்பும் பெண்கள் இருக்கிறார்கள். பன்முக திறமைகள் கொண்ட பெண்கள் இந்த சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகம். பெண்களுக்கான சம உரிமை மற்றும் பொருளாதார சுதந்திரமே ஒரு சமூகத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது.

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இன்று மார்ச் 8. சர்வதேச மகளிர் தினம் ஆகும். அதனை முன்னிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் வெளியிட்டுள் மகளிர் தினச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

பெண் என்பவள் இந்த தேசத்தைக் கட்டியமைக்கும் வலிமை கொண்டவள். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் பெண்களின் பங்கு என்பது அளப்பெரியது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப்படும் இடத்தில் இலங்கை முதலாவது இடத்தில் காணப்படுகிறது. அதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு உலகின் முதல் பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆவார். ஒரு சிறந்த பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இருந்தார். அவர்களின் ஆட்சியின் போது மக்களுக்காகச் சிறப்பாகச் செயற்பட்டு சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்தார். பெண்களின் சிறந்த ஒரு தலைமைத்துவத்துக்கு அவர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.



பெருந்தோட்ட பெண்கள் பிரித்தானிய ஆட்சி காலம் முதல் இன்றுவரை இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது நம் நாட்டுக்கான அந்நியச் செலவாணியைப் பெருந்தோட்ட பெண்கள் பெற்றுக் கொடுத்து நம் சமுதாயத்துக்கு எடுத்துக் காட்டாக திகழ்ந்து வருகின்றனர்.

பெண்கள் நினைத்தால் இந்த சமூகத்தில் எத்தகைய மாற்றத்தையும் கொண்டுவர முடியும். வீட்டையும் நாட்டையும் கட்டியெழுப்பும் வலிமை பெண்களுக்கே உண்டு.

பெண்களை மதித்துக் கொண்டாடுவதுடன் அவர்களின் முன்மாதிரியான செயற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.– என்றுள்ளது.

# மார்ச் 8 - மகளிர் தினம்

# ஈழப் பெண் கவிஞர்களும் சங்க இலக்கியத்தில் பெண்களும்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா-

## உரிமைக்காக போராடிய பெண்கள்

1908 ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் மார்ச் 8 அன்று பெண் தொழிலாளர்கள் ஒன்று கூடி எட்டு மணி நேர வேலை, உழைப்புக்கேற்ற ஊதியம், பெண்களுக்கும் வாக்குரிமை என அடிப்படை உரிமைகளுக்காக போராடி, அரசின் அடக்குமுறைகளை எதிர்கொண்டு, இரத்தம் சிந்தி வென்றார்கள். இதன் மூலம் சாதாரண பெண்களும் போராடி உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று உலகுக்கு உணர்த்திய நாள் இதுவாகும்.

பொருளாதார விடுதலைதான் பெண் விடுதலையின்

**(அடுப்போடு வாழ்ந்த பெண்கள் நெருப்பாய் எழுந்த - சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 உழைக்கும் பெண்கள் தமது அடிப்படை உரிமைக்காக போராடி இரத்தம் சிந்திய நாளாகும். அரசியல், சமூக, பொருளாதார உரிமைகள் பெறவேண்டி போராடிய பெண்களின் தினமே மார்ச் 8 )**

முதல்படி. முன்னரைவிடப் பெண்கள் படிப்பதும், வேலைக்குப் போவதும் அதிகரித்திருக்கிறது. இந்தப் பொருளாதார சுதந்திரம் வேண்டியே 1910 இல் கோபன்ஹேகனில் நகரில் மார்ச் 8 ஐ உலக உழைக்கும் பெண்கள் தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார் சோசலிச பெண்ணுரிமைப் போராளியான கிளாரா ஜெட்கின்.

ஆயினும் இன்றைய தனியார்மயம் – தாராளமயம் – உலகமயம் என்கின்ற மறுகாலனியாக்கச் சூழலில் பெண்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள்.

அல்லது பெண்ணடிமைத்தனம் புதிய வடிவங்களில் இவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்விகளுக்கு விடை தேடுவதும், பெண்கள் விடுதலையிலும் சமூக விடுதலையிலும் அக்கறையுள்ள அனைவரதும் கடமையாகும்.

## சமூகவிடுதலையும் பெண்களும்

பெண் வயிற்றில் பிறந்து, பெண்ணால் வளர்க்கப்பட்டு, பெண்ணோடு வாழ்பவர்கள்தான் எனினும், பெண்ணின் துயரங்களையும், விருப்பங்களையும், உணர்வுகளையும் மற்றவர்கள் தெரிந்து கொள்வதில்லை.

இதனாலேயே பெண்ணுரிமைகளை வென்றெடுக்க



வேண்டும் என்ற நோக்கத்தோடு மார்ச் 8, 1857இல் நியூயோர்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி போராட்டங்களை முன்னெடுத்தன.

அந்த மாநாட்டில் இயற்றப்பட்ட புரட்சிகர தீர்மானங்களும், சட்டத்திருத்தங்கள் மூலமான உரிமைகளையும் முன்வைத்துப் போராட்டங்கள் நடத்தப்பட்டது. உழைக்கும் பெண்கள் இரத்தம் சிந்தி வென்றெடுத்த இந்த உரிமைகள்தான் இன்று பல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமாக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி பெண்கள் உயர்வின் வெற்றியில் எங்கள் சங்க தமிழ் இலக்கியங்களும்- வடமொழி இலக்கியங்களும் எத்தகைய வகிபாகம் வகித்தன என்பதனை அலசும் ஆய்வே



இதுவாகும்.

## பெண்ணைப் போற்றிய தமிழ் இலக்கியங்கள்

உலகம் முழுவதுமே பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த கால கட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் காப்பியங்கள். ஆண்டாண்டு காலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியது நம் தமிழ் இலக்கியங்களே ஆகும்.

உலக மொழிகளின் தாய் என்று கூறிக் கொள்ளும் கிரேக்கத்தில் கூட 7 பெண்கள் தான் அக்காலத்தில் இருந்தனர். ஆனால் சங்க காலத்திலேயே, 47 பெண் எழுத்தாளர்களைக் கொண்டது உலகிலேயே தமிழ் சமூகம் மட்டும்தான்.

அன்றைய வடமொழி இலக்கியமான இராமாயணத்தில் இராமன் தன் மனைவியை சந்தேகித்து பதினான்கு வருடம் வனத்தில் தள்ளிய வரலாறும் நாம் கண்டோம்.

ஓர் அழகிய இளம் மங்கை. அவளுக்கு முதிர்ந்த கணவன். மனமுவந்து வாழ்கிறாள். ஒரு கட்டத்தில் கணவன் குஷ்டரோகியாகிறான். அதன் பிறகும் அவளுக்கு வெறுப்பு ஏற்படவில்லை. அவனை ஆராதிக்கிறாள். ஒரு கட்டத்தில் ஒரு தாசியை பார்த்து “நான் இவளோடு கூட வேண்டும்” என்கிறான் அதற்கும் அவள் இசைகிறாள்.

தாசிக்கு கூலியாக தாசியின் வீட்டை துப்புரவு செய்வது உள்ளிட்ட பணிகளைச் செய்கிறாள். தன் கணவனைத் தோளில் தூக்கிச் சென்று தாசியின் வீட்டுக்குச் செல்கிறாள். இது நளாயினி கதை. இது அனைத்தும் வட மொழி இலக்கியங்கள்தான்.

ஆனால் சங்க தமிழ் இலக்கியங்களில் புலியை, யானையை விரட்டிய பெண்களின் வீரமும் போருக்குத் தன் கணவன், மகன் என ஒருவர் பின் ஒருவராக அனுப்பி வைத்த பெண்களின் வீரமும் விதந்து போற்றப்பட்டுள்ளன. பெண்கள் போர்க்களத்தில் போரில் ஈடுபடுத்தப்பட்டமை பற்றிய குறிப்புக்கள் இல்லை. யுத்தம் நிறைவுற்ற பின் போரில் புண்பட்ட வீரர்களை, கணவனை காவல் செய்யும் செய்த வரலாறும் உண்டு.

## காப்பியங்களில் தமிழ்ப் பெண்கள்

தன் கணவனை செய்யாத குற்றத்துக்காகக்க கொலை செய்து விட்டது அரசு. தன் கோப தீயால் ஒரு நகரத்தையே எரிக்கிறாள், தன் உள்ளத்து எரிச்சல் பற்றி எரிகிறது என கெக்கலிட்டு சிரிக்கிறாள், ஆவேசமாக எரித்த படியே வேகமாக நடந்து சென்று சற்று நிதானித்து திரும்பி பார்க்கிறாள், ‘அனைத்தும் எரிந்து விட்டதா அல்லது இன்னும் மிச்சமிருக்கிறதா’ என வெளிப்படுகிறது சிலப்பதிகாரம்.

15▶

## மார்ச் 8 - மகளிர் தினம்

# ஈழப் பெண் கவிஞர்களும் சங்க இலக்கியத்தில் பெண்களும்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவள் ஓர் பேரழகி. அவள் அழகில் கவரப்பட்டு ஓர் இளவரசன் தன் காதலை அவளிடம் கூறுகிறான். அவள் வலக் கையில் வாங்கி இடக் கையில் தூர வீசிவிட்டு சலனமற்று நடக்கிறாள். இளவரசனும் ஆபாசமாக மிரட்டவில்லை. அவள் உணர்வுக்கு மதிப்பளித்து சென்று விடுகிறான். இப்படி வியாபிக்கிறது மணிமேகலை.

தமிழ் மொழி எப்போதுமே பெண்களை உயர்வாகவே கொண்டாடுவதை இலக்கியங்களில் காணலாம். ஆனால் இதற்கு மாறாக வடமொழிகள் பெண்களை அடிமைத் தனமாக் குவதுடன் ஆணாதிக்க மேலாண்மையை எப்போதும் உயர்த்தி நிற்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தில் பெண் போராளிகள் சாதித்த வல்லமை உலகின் எந்த இலக்கியங்களிலும் ஒப்பா காது. அளப்பெரும் தியாகங்களும் ரணகளத்தில் போராடிய இவர்கள் தமது வீரம் செறிந்த செயற்பாடுகளையும் போரியல் வாழ்வின் கோலங்களையும் பல்வேறு புதிய அனுபவங்களை யும் இலக்கியங்களாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த போர்க்கள இலக்கியத்தில் பெண் கவிஞைகளின் படைப்புகள் உயிர்த்துடிப்பானவை.

“கூவி வந்த எறிகணைக்காய்க்
குனிந்தோம்
அடுத்த செல் வந்து
அதிருமுன்னே விரைந்தோம்
மீண்டும் கையில்
எடுத்த ஆயுதத்துடன்
நடந்தோம்.” என்று

புரட்சிகா எனும் பெண் போராளி கவிஞை உரத்துக் கூவுகிறார்.

ஓர் ஆண் என்ன செய்தாலும் அவனுக்கு சேவகம் செய்வதொன்றே பெண்ணின் பணி என்பதைச் சொன்னது தான் வடமொழி இலக்கியங்கள்.

அவன் ஆணோ, கணவனோ, அரசனோ, ஆண்டவனோ அநீதி என்றால், அறம் தவறினால் அடங்காதே, அவனை எதிர்த்து போராடு என்பதை போதிப்பதுதான் தமிழ் இலக்கி யங்கள்.

தமிழ் மொழி எப்போதுமே பெண்களை உயர்த்திக் கொண் டாடுவது வழமை. ஆனால் வடமொழி இலக்கியங்களில் பெண் களை அடிமைத் தனமாக்குவது பற்றியே அதிகம் வெளிப்ப டுத்தப்பட்டுள்ளன.

புற நானூற்றை மிஞ்சிய வடிவமாய் மனோதைரியத்தை யும் விடுதலை வேட்கையையும் கைவிடாத வீர உணர்வும் தைரியமும் மிக்கவர்களாக தம்மை இனங்காட்டுவதோடு, தமது சுயத்தையும் நம்பிக்கையையும் இழக்காதவர்க ளாக ஈழப் பெண் போராளிக் கவிஞைகள் மிளிர்ந்துள்ள னர்.

இந்தப் பெண் போராளிகளின் படைப்புகளில் தாம் எவருக்கும் அடங்கி, அடிமைப்பட்டுப் போகாத, இலக்கை அடைவதையே நோக்காகக் கொண்ட, தமது சுயத்தை இழக்காத தன்மையை அவதானிக்க முடிகின் றது.

உலகம் முழுவதுமே பெண்களைக் ஒடுக்கி வைத்திருந்த கால கட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் சமூகம். பிற்கால ஈழப்போராட்ட களத்தில் பெண் போராளிக் கவிஞைகளாக பலராலும் அதிகம் அறியப்பட்ட, அடையாளப் படுத்தப்பட்ட கவிஞைகளான அம்புலி, ஆதிலட்சுமி, கஸ்தூரி, வானதி, பாரதி, அலை யிசை, மலைமகள், தூயவள், நாமகள், சூரியநிலா, சுதா மதி, தமிழவள் , காந்தா, ஜெயா, கலைமகள், கனிமொழி, ஞனமதி, புரட்சிகா, நகுலா, நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபிமார்க்கட், தயாமதி, சிரஞ்சீவி, கிருபா போன்றோரின் கவிதைகளும் தமிழ் மண்ணின் வீரத்தை பரணிக்கு பறை சாற்றுகின்றன.


ஈழத்தில் யுத்தகளத்தில் நேரடியாக பங்கு கொண்ட வீரப் பெண்களின் வல்லமையையும் போரிடும் திறமையையும் வீர உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வானதியின் வரிகளாக...

“மழையில் நனைந்து
அடுத்த ஆடை மாற்றாது
பொஸிசனில் நின்றதை
பசி மறந்து தூக்கம் மறந்து
எதிரி எல்லையை மீறுவதெனில்
எம் உடல்கள் மேலாகத்தான் என
உறுதியோடு காவலிருந்ததை கூறுவாயா?” என வின வுகிறார்.

இப்படியாக போராளிப் பெண்களின் படைப்புகள் போரியல் வாழ்வைத் துல்லியமாகப் படம் பிடித்துக்காட் டின.

ஆனால் தேவபாசை என்று கூறிக் கொள்ளும் சமஸ்கிருதத்தில் ஒரு பெண் எழுத்தாளர் கூட கிடை யாது.

ஏன்? சமஸ்கிருதத்தை வாசிக்கவோ, பேசவோ கூட பெண் களுக்கு உரிமை கிடையாது. ஆனால் கீழடி போன்ற இடங்களில் இருந்து கிடைத்ததில் தங்கத்திலும், பானை ஓடுகளிலும் பெண்களின் பெயரைப் பொறித்து புழங்குமள வுக்குத் தமிழ் சமூகம் நாகரீகம் கொண்டது. ஆண்டாண்டு




காலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியது நம் தமிழ் காப்பியங்கள்.

வீரமாக போரிட்டு, உலகை வியக்க வைத்த ஈழப் பெண்க ளின் உண்மை தற்போது மறைக்கப்பட்டு, கோலப்போட்டி, சமையல் போட்டி, அழகிப்போட்டி என பெண்களின் சிந்தனை திட்டமிட்டு திசை திருப்பப்பட்டுள்ளது. இன்று காதலர் தினம் போல பெண்களுக்கு ஏதோ ஒரு பரிசு கொடுத்து வாழ்த் துக் கூறுவது என்று நிறுவனமயப்படுத்தப் பட்டிருக்கி றது.

ஆயினும் புறநானூற்றை விஞ்சிய வீரம் படைத்த ஈழப் பெண்களின் வரலாற்றை உலகம் ஒருபோதும் மறவாது. அதற்கு சான்றாக அவர்களின் படைப்புகளே இலக்கிய சான்றுகளாக சாட்சி பகர்கின்றன.

# பருத்தித்துறையிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவைகள்!



மகா சிவராத்திரி தினமான இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருக் கேதீச்சரத்துக்கு விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினம் சிறப்பாக கொண்டா டப்படுகின்றது. இதில், வடமராட்சி மக்கள் கலந்து கொள்ள வசதியாகவே இந்த விசேடசேவையை இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி, பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து அதிகாலை 5 மணி, காலை 9 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 3 மணி மாலை 6 மணி ஆகிய நேரங்களில் இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று பருத்தித் துறை டிப்போ முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# விடுமுறையை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்



நீண்ட வார இறுதி விடுமுறையை முன்னிட்டு இன்று முதல் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு மற்றும் மலையக மார்க்கங்களில் இந்த ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என்.எம்.ஜே.இதிபொல தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு தபால் ரயில் சேவைக்கு முன்னதாக பதுளை நோக்கி ரயிலொன்று புறப்பட்டிருந்தது. இன்று காலை 7.30 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி ரயிலொன்று சேவையில் ஈடுபடவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி காலை 7.45 மற்றும் மாலை 5.20 மணிக்கு பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி இரண்டு ரயில்கள் பயணிக்க வுள்ளன.

இதனை தவிர இன்று அநுராதபுரத்திலிருந்து காங் கசன்துறை வரையிலும் விசேட ரயிலொன்று சேவையில் ஈடுபடவுள்ளது.

# வடக்கில் தற்காலிக பணி இணைப்பிலுள்ள 388 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்குக

## பிரதமரை நேரில் சந்தித்து ஆளுநர் கோரிக்கை

வடக்கு மாகாணத்தில் தற்காலிக பணிஇணைப்பிலுள்ள388பேருக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற் குரிய அமைச்சரவை அனுமதியைப் பெற்றுத்தருமாறு பிரதமரிடம், வடக்கு ஆளுநர் நேரில் கோரிக்கை விடுத் துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, பதிலீட்டு, சாதாரண மற்றும் தினக் கூலி அடிப்படையில் சேவையாற்றும் 388 பேருக்கான நிரந்தர நியம னத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு பிரதர் தினேஷ் குணவர்தனவிடம் நேரடியாக சென்று கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவல கத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடை பெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச் சில்பணியாற்றும்67பேருக்கும்,உள்ளூ ராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் 321 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவசர மற்றும் அத்தியாவசிய தேவை கருதி சேவையில் இணைக்கப் பட்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், இவர்க ளின் அனுபவம் மற்றும் துறைசார்ந்த திறன், அறிவைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதனூடாக எதிர்காலத் தில் ஏற்படக்கூடிய அவசர நிலை களை ஈடுகொடுக்க கூடியதாக அமை யும் எனவும் ஆளுநர், பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.



தற்காலிகமாக சேவையில் இணைத் துக் கொள்ளப்பட்டவர்கள், நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொள்ள காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்த ஆளுநர், சம்பந்தப்பட்டவர்களின் பெயர்பட்டியல் அடங்கிய கோரிக்கை கடிதத்தையும் பிரதமரிடம் சமர்பித் துள்ளார்.

விசேட திட்டத்தின் கீழ் இவர்களுக் கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு ஆளு நர், பிரதமரிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

இதேவேளை, ஒரு இலட்சம் வேலை வாய்ப்பின் அடிப்படையில் வழங்கப் பட்ட சிற்றூழியர் நியமனங்கள் வடக்கு மாகாணத்தில் முழுமையாக நிரப்பப்படவில்லை எனவும் ஆளுநர் தெரிவித்தார். இதனால் வடக்கு மாகா ணத்திலுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிற்றூழியர்களுக் கான வெற்றிடங்கள் காணப்படுகின் றன எனவும் அவர் குறிப்பிட்டார். இந்த வெற்றிடங்களை நிரப்பி, சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறும் வடக்கு மாகாண ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கை கடிதத்தை பெற்றுக்கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தன, இந்த விடயம் தொடர்பில் விரைவில் சாதக மான பதிலை வழங்குவார் என உறுதி யளித்தார்.



# யாழ் அரச அதிபருக்கு நேற்றுப் பிரியாவிடை

யாழ் மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலராக கடமையாற்றி ஓய்வு நிலை பெற்று செல்லும் அம்பலவாணர் சிவ பாலசுந்தரனுக்கு நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பிரியா விடை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட செயலகத்தின் முன்றி லில் இருந்து தமிழர்களின் பாரம்பரிய தமிழ் கலை வடிவங்களுடன் வரவேற் கப்பட்டார். பின்னர் தமது கடமையை உத்தியோகபூர்வமாக மேலதிக அர சாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனுக்கு கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

தொடர்ந்து யாழ் மாவட்ட செயலகத் தின் கேட்போர் கூடத்தில் பிரியாவிடை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன் பொழுது யாழ் மாவட்ட செயலரின் நினைவுகளைத் தாங்கிய “அருமருந் தென்ன“ என்ற தலைப்பிலான இறுவட்டு மாவட்ட செயலகத்தின் உத்தியோகத் தர்களால் வெளியீடு செய்து வைக்கப் பட்டது.

யாழ் மாவட்ட செயலராக கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது கடமைகளை பொறுப்பேற்ற மாவட்ட செயலர் இன்றுடன் ஓய்வு பெறுகின்றார். 1992 டிசெம்பர் மாதம் அரச சேவையில் இணைந்த அவர், 1995 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவையில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நிகழ்வுகளின் பொழுது யாழ் மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவரது குடும்பத்தினர், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# விமானப்படையின் சாகசமும், கண்காட்சியும் இன்று 3 ஆவது நாளாக யாழ் முற்றவெளியில்

இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு “வான் சாகசம் - 2024” கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் – முற்றவெளி மைதானத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது.

“நட்பின் சிறகுகள்“ எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்றுமுந்தினம் ஆரம்பமாகிய கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதிவரை காலை 10 மணி முதல் இரவு 11 மணிரை இடம்பெறவுள்ளது.

நேற்றைய நிகழ்வில், முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கை விமானப்படையின் படைத் தலைமை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் சம்பத் விக்ரமரத்ன ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது பல்வேறு சாகச நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசேடமாக வீர வீராங்கனைகள் பங்கேற்ற சைக்கிள் பந்தயமும் இடம் பெற்றது.



















# தேசபந்து தென்னகோனின் நியமனத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மனு தாக்கல்

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியினால் உயர் நீதிமன்றில் நேற்று அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் ஊழல் எதிர்ப்புக் குழு உறுப்பினர்களான நிரோஷன் பாதுக்கமற்றும்ஆனந்தபாலிதஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்பு பேரவை ஆகியன இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்பு பேரவை உத்தியோகபூர்வமாக அங்கீகாரம் வழங்கவில்லை என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# கோப், கோபா குழுக்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்





கோப் எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நிலையியல் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தன, மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் கோப் குழு முதல் தடவையாக நேற்று கூடியபோதே அவர் தெரிவு செய்யப்பட்டார்.

இதன்போது, தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தனவின் பெயரும் காமினி வலேபொடவின் பெயரும் முன்மொழியப்பட்டன.

குழுவின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அனைத்து உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் என புதிய தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், எந்தவித அரசியல், கட்சி பேதங்களும் இன்றி ஒரே குழுவின் உறுப்பினர்களாக அனைவருடனும் பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கிறேன் என்றும் ரோஹித அபேகுணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, கோபா எனப்படும் நாடாளுமன்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டார்.

லசந்த அழகியவண்ணவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன முன்மொழிந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வழிமொழிந்தார்.

இதன்போது, குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் புதிய தலைவர் வருகை தந்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். குழுவின் எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக்குவதற்கு அனைத்து உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இருவருக்கும் பிணை

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் இந்திரஜித் மற்றும் புத்திக்க நிமல பிரபாஷ் ஆகியோர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.








கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இலங்கசிங்க முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத கூட்டத்தில் கலந்துகொண்டு, அமைதியை சீர்குலைக்கும் வகையிலும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் விடுத்த குற்றச்சாட்டிலும் மதுஷான் இந்திரஜித் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புத்திக நிமல பிரபாஷ் ஆகியோர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மாணவர்களால் இழைக்கப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைககள் என்னவென நீதிவான் இதன்போது பொலிஸாரிடம் வினவியுள்ளார்.

சந்தேகநபர்கள் எவ்வித தீங்கும் இழைக்கவில்லை எனப் பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த நீதிவான், சந்தேகநபர்களுக்கு பிணை அனுமதி வழங்கி உத்தரவை பிறப்பித்திருந்தார்.

# பெண்கள் உரிமைகளும் பாதுகாப்பும்



தொகுப்பாக்கம்:
எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா
அதிபர், கல்முனை
அஸ்-ஸஹ்றா வித்தியாலயம்.

மனிதன் பிறக்கும்போதே அவனுடன் சேர்ந்து உரிமைகளும் பிறக்கின்றன. இது விட்டுக்கொடுக்க முடியாத அவர்களுக்கிடையில் பெற வேண்டிய மற்றும் உரித்தானவையாகும்.

இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் இன்றி மனிதனால் வாழ முடியாது எனக் கருதப்படுகின்றது. உலகலாவிய ரீதியில் அனைவருக்கும் சமமாகவும் பிரிக்க முடியாததுமான இந்த மனித உரிமைகள் வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வழியாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் பெண்களின் உரிமையை எடுத்து நோக்கினால் மனிதனின் ஆதிகால சமூதாயமானது பெண்களின் தலைமைத்துவத்தையே கொண்டிருந்து. இது மட்டுமல்லாது பெண்கள் தெய்வங்களாகவும் போற்றப்பட்டனர்.

ஆனால், மனித நாகரிகம் வளர்ச்சியடைய வளர்ச்சியடையப் பெண்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்தனர். இதனால்தான் பெண்ணியல்வாதிகளின் சிந்தனைகளாலேயே பெண்களின் உரிமைகள் மீட்டெடுக்கப்படல் வேண்டும் என்ற எண்ணக்கரு மேலோங்கியது எனலாம்.

இந்த நிலையில் பெண்களுக்கு எதிரான சில வன்முறைகள் தோன்றின. கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொந்தரவு, பெண்களை, இழிவான வியாபாரத்தில் பயன்படுத்தல், பலாத்காரப்படுத்தல், தடுப்புக்காவல் மற்றும் யுத்த காலங்களில் கற்பழிப்பு, இனப்பெருக்க உறுப்புகளை சிதைத்தல், சிறுவயது திருமணம், குடும்ப வன்முறைகள், சீதனம் போன்ற இன்னோரன்ன விடயங்களில் பெண்கள் பல்வேறு இம்சைகளுக்கு ஆளாகின்றனர்.

20 ஆம் நூற்றாண்டில் ஐக்கிய நாடு சபையின் தோற்றத்துடன் மனித உரிமைகள் வளர்ச்சியடையத் தொடங்கின. பெண்கள் உரிமைகள் தொடர்பாகக் கரிசனை ஏற்படத் தொடங்கியது.

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனமானது பெண்களின் உரிமைகள் தொடர்பாக அத்திவாரமிடக் காரணமாயிற்று. மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடன உறுப்புரை 01 இல் “மனித பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மசாட்சியையும் இயற்கையாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ள வேண்டும்” என்று தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடன உறுப்புரை 02 இல் “இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைய தேசிய அல்லது சமூகத்தோற்றம் ஆதனம், பிறப்பு அல்லத பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இந்தப் பிரகடனத்தில் தரப்பட்டுள்ள



எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 03 “வாழ்வதற்கும் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் சகலரும் உரித்துடையோராவர்.” என்று தெரிவிக்கின்றது.

உறுப்புரை பிரிவு 07 இல் “எல்லோரும் சட்டத்துக்கு முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமுமின்றிச் சட்டத்தின் முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்களாவர்.” என்று தெரிவிக்கப்படுகிறது. இவை பெண்களின் உரிமைகள் தொடர்பான ஆரம்ப ஆவணங்களாக காணப்படுகின்றன.

உறுப்புரை 06 “ஆணுக்கும் பெண்ணுக்குமாக சமநிலையான உரிமையை அரசு நிச்சயப்படுத்த வேண்டும்” என்கிறது.

உறுப்புரை 23 “குடும்பமானது, சமூகத்தாலும், அரசாலும் பாதுகாக்கப்பட உரித்துடையது” என்று ஏற்றுக்கொள்ளும் அதேவேளை “திருமணத்திலும், திருமண காலத்திலும் மற்றும் அதன் அமைப்பிலும் வாழ்க்கைத் துணைவர்களின் சமமான உரிமைகளை உறுதிப்படுத்த அரசு கடமைப்படுகின்றது” என்கிறது. இங்கு திருமண வயதில் ஆள்சார் சட்டங்களில் வயது வித்தியாசம் காணப்படுகின்றது.

உறுப்புரை 03 பொருளாததார சமூகப் பண்பாட்டு உரிமைகளையும் ஆராய்வதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்துகின்றது.

உறுப்புரை 07 (அ) (i) இற்கமைய “ஆண்களின் ஆளப்படுகின்ற வேலை நிபந்தனைகளிலும் பார்க்கக் குறைந்தளவான வேலை நிகந்தனைகளுக்கு பெண்கள் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்”.

உறுப்புரை 13 (2), 10 (i) “கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்” என்பதைக் குறிப்பிடுகின்றது.

அந்த அடிப்படையில் 1980 களில் தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அழித்தொழிக்கப்படல் வேண்டும் என்ற கரிசனையும் ஏற்பட்டது. இது பெண்களின் உரிமைகள் தொடர்பான பிணக்கும் இரண்டு அம்சங்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டது.

1. பெண்களுக்கெதிரான ஓரம்கட்டுதல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

2. பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

இந்த அடிப்படையில் CEDAW 1981 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இந்தச் சமவாயமானது எவை பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களாக கொள்ளப்பட வேண்டும் அத்துடன் அத்தகைய பாரபட்சங்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்று இரு விடயங்களையும் விரிவாக விளங்குவதன மூலம் அதனை

தொடர்ச்சி ▼

# பெண்கள் உரிமைகளும் பாதுகாப்பும்

தொடர்ச்சி▲

அனேகமாகப் பெண்கள் உரிமைகளுக்கான சர்வதேச சட்டமூலம் என்று சிறப்பாக விவரிக்கின்றது. இந்தச் சமவாயமானது ஆறு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பகுதி ஒன்றில் உறுப்புரை 01 முதல் 06 வரை பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தின் வரைவிலக்கணத்தை உள்ளடக்கியுள்ளது.

பகுதி இரண்டில் உறுப்புரை 07 முதல் 09 வரை அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அரசுகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

பகுதி மூன்றில் உறுப்புரை 10 முதல் 14 வரை கல்வி, தொழில் வாய்ப்பு, உடல் நலம், பொருளாதார, சமூக, கலாசார வாழ்வு போன்ற துறைகளில் பெண்களுக்கு எதிரான பாரபட்சங்கள் அகற்றுவது தொடர்பான முன்னேற்பாடுகளை கொண்டுள்ளது. மேலும் இந்தப் பகுதிக் கிராமிய பெண்களின் விசேட பிரச்சினைகள் தொடர்பாக அரசுகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

பகுதி இரண்டு, ஏன் 15 ஆம் 16 ஆம் உறுப்புரைகள் பெண்களின் உரிமைகள் மற்றும் விவாகம், குடும்பவியல் சட்டம் என்பவற்றை செயற்படுத்துகையில் சட்டத்துக்கு முன் ஆண்களுடன் பெண்கள் சமம் என்ற நிலையை அடைந்து கொள்வது தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

வியட்னாமில் 1993 இல் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் உலக மாநாடு பெண்களால் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டம் ஒரு தேசிய மைல் கல் எனலாம். இந்த மாநாட்டுக்கு முன்னரும் அது நடந்த வேளையிலும் பெண்கள் முன்னொரு பொழுதும் கண்டிராத விதத்தில் தமது சக்திகளை ஒருங்கிணைத்ததால் சர்வதேச சமூகம் பின்வருமாறு கூறியுள்ளது.

“பெண்களதும் பெண்பிள்ளைகளதும் மனித உரிமைகள் பராதீனப்படுத்த முடியாத உள்ளார்ந்த மற்றும் பிரிக்க முடியாத அனைத்துலக மனித உரிமைகளின் ஒரு சக்தியாகும்.”

யு.என். பொதுச் சபைகளால் 1999 ஆம் ஆண்டு Optinal Protocol to the CEDAW அங்கீகரிக்கப்பட்டு 2000 ஆண்டு நடைமுறைக்கு வந்தது. வந்தது. இலங்கை 2002 ஆம் ஆண்டு பின்னுறுதிப்படுத்தியது. இதன் கீழான ஏற்பாடுகள் இலங்கை பிரஜைகளுக்கும் ஏற்புடையதாகும்.

சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட உரிமைகள் அரச தரப்பால் மீறப்படுகையில் பாதிக்கப்பட்டவர் அல்லது அவர் சார்பில் தனிப்பட்டவர் அல்லது அவர்களின் குழு தனது குழுவுக்கு அறிவிக்கலாம். அத்தகைய அறிவிப்பு எவரேனும் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் குறித்த பாதிக்கப்பட்டவரின் சம்மதம் பெறப்படல் வேண்டும் அல்லது அதை நியாயப்படுத்த வேண்டும். அனாமதேய அறிவிப்புகள் கருத்தில் கொள்ளப்படாது.

ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில் சட்டங்கள் பெண்கள் ஆபத்தான தொழில் செய்வதில் இருந்து பாதுகாப்பு வழங்கும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் இது பெண்கள் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கு ஒரு தடையாகக் காணப்படுகிறது.

இவ்வாறு பெண்களைப் பாதுகாப்பது தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் நீதிமன்றின் ஊடாக வழக்குத் தொடர்தல் மற்றும் தீர்ப்புகளைப் பெறுதல் என்பன குறைந்தனவாகவே காணப்படுகின்றன.

சர்வதேச மகளிர் தினம் சுருக்கமாக IWUD என்றும் அழைக்கப்படுகின்றது.இது தொழிலாளர் இயக்கத்திலிருந்து வளர்ந்து ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிகழ்வாக மாறியது. மகளிர் தினம் 1911 ஆம் ஆண்டில் இருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. எனவே, இந்த ஆண்டு 2024 மார்ச் 08, இன்று கொண்டாடப்படும் மகளிர் தினத்தில் ஊதா நிறம் நீதி மற்றும் கண்ணியத்தையும் , பச்சை நிறம் நம்பிக்கையையும் , வெள்ளை தூய்மையையும் பிரதிபலிக்கிறது.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, நல்லிணக்கம், மொழித் தொண்டாற்றல், கலை, அறிவியல், மேம்பாடு, கலாசாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு “024 ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருது” (08.03.2024) இன்று இந்தியாவில் தமிழக முதலமைச்சரால் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. எனவே, எமது பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றைப் பயன்படுத்தி எமது நாட்டின் அபிவிருத்தி பாதைக்கு கை கொடுக்க வேண்டும்.

எனவே, இன வேறுபாடின்றி சுதந்திரமாக பாரபட்சம் காட்டாது சமத்துவத்துடன் சமமான உரிமைகள், நேர முகாமை, கல்வி மற்றும் வியாபாரம் என்று அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, பண்பாடு ரீதியாக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் சகல மக்களுடனும் இணக்கப்பாட்டுடன் வாழ்வதற்கும் இந்த மகளிர் தினத்தில் எமக்களித்த உரிமைகளையும் பாதுகாப்பையும் உயிரூட்டி சக்தி நிறைந்த பலமாக மகளிர் ஒன்று பட்டு வாழ்வோம்.




# சர்வதேச, உள்நாட்டு சதிகளை எதிர்கொள்ள முடியாமற்போனது

## கோட்டாபய ராஜபக்ஷ தனது நூலில் தெரிவிப்பு

“வைராக்கியம் கொண்ட சர்வதேச சக்திகளும் ஒரு சில உள்நாட்டு தரப்பினரும் என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றுவதற்காக வன்முறையுடன் கூடிய எதிர்ப்புகளையும் நாசகார செயற்பாடுகளையும் வகுத்து, அதற்கான நிதியுதவிகளை வழங்கினர்.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட தனது நூலில் தெரிவித்துள்ளார்.

“ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை அகற்றுவதற்கான சதி“ என்ற பெயரிலான இந்த நூல் நேற்றுக் காலை முதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்ட போது கோட்டாபயவின் வெளியேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின்போது அனுபவித்த சோதனைகளை இந்த நூலில் அவர் விவரித்துள்ளார்.

அந்த நூலில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிக்கையில் –

“வைராக்கியம் கொண்ட சர்வதேச சக்திகளும் ஒரு சில உள்நாட்டு தரப்பினரும் என்னை ஆட்சியிலிருந்து அகற்றும் வரை, அவர்களின் நடவடிக்கைகளை நிறுத்த மாட்டார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன்.

மக்களை பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில், முன்னெடுக்கப்பட்டு வந்த அரசியல் சதி மற்றும் நாசகார செயல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நான் இராஜினாமாச் செய்தேன்.

நான் பதவி விலகக்கூடாது என வலியுறுத்திய பிரதான சர்வதேச வல்லரசு ஒன்றும் இருந்தது. அந்த சர்வதேச வல்லரசு இலங்கைக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் தயாராகி இருந்ததை செயற்பாட்டு ரீதியில் நிரூபித்திருந்தது. அவ்வாறான நிலையிலும் மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்காக நான் பதவி விலகினேன்.

ஒரு சில வல்லரசு நாடுகள் ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சியின் காவல் தெய்வங்களை போன்று உலக அரங்கில் தம்மை காண்பிக்கின்றன. ஜனநாயகம், சட்டவாட்சியை ஊக்குவிப்பதாக கூறிக்கொண்டு அபிவிருத்தி அடைந்து வரும் அனைத்து நாடுகளிலும் சம்பளம் பெறும் செயற்பாட்டாளர்கள் வலையமைப்பொன்றை அந்த நாடுகள் பராமரிக்கின்றன. உண்மையில் அவர்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்குப் பதிலாக தமது தேவைகளையே நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

என்னை பதவியிலிருந்து அகற்றுவதற்காக சில சம்பவங்கள் அரங்கேறப்பட்டன. மிரிஹானையிலுள்ள எனது வீட்டிற்கு முன்பாக 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற எதிர்ப்பு நடவடிக்கை அவ்வாறாதொரு சம்பவம்.

இரவு 8 மணியளவில் பெங்கிரிவத்த வீதியை நெருங்கிய பேரணியில் குறிப்பிடத்தக்க அளவானவர்கள் இணைந்திருந்தனர். இந்த அனைத்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது, இராணுவத்தளபதி சவேந்திர சில்வா, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன உள்ளிட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரிகள் கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். நடப்பதை நான் சவேந்திரவுக்கும் கமலுக்கும் கூறினேன். ஷங்ரிலா ஹோட்டலில் திருமண நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் சுரேஷ் சலே மிரிஹானவிற்கு வந்தார். அவர் வருகின்றபோது அந்த இடத்தில் சுமார் நூறு ஆர்ப்பாட்டக்காரர்கள் மாத்திரமே இருந்தனர். எனினும், அங்கிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், இராணுவ அதிகாரிகளுக்கு செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பில் எவரும் ஆலோசனை வழங்கியிருக்கவில்லை. அந்த இடத்தில் இருந்து சலே – சவேந்திரவுக்கும் கமாலுக்கும் வீடியோ அழைப்பை ஏற்படுத்தி அங்கு வந்திருந்தவர்களை காண்பித்தாலும் அவர்களை கலைப்பதற்கான ஆலோசனை உயர்மட்ட அதிகாரிகளிடமிருந்து கீழ்மட்டத்திற்கு வரவில்லை.

இராணுவத்தளபதி , பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி , பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் மறுநாள் முற்பகல் 10.30 மணியளவிலேயே எனது இல்லத்திற்கு வருகை தந்தனர்.

இராணுவ தலைமையகத்தில் இருந்த நடவடிக்கை நிலையத்தை கொழும்பு ஜனாதிபதி மாளிகைக்கு மாற்றுமாறு 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி நான் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்னவிற்கு ஆலோசனை வழங்கினேன்.

மே மாதம் 9 ஆம் திகதி இரவு அலரி மாளிகையில் இருந்த முன்னாள் பிரதமர் உள்ளிட்ட குழுவினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக இராணுவத்தினரை வரவழைக்கும் போது ஏற்பட்ட சீரற்ற அனுபவம் காரணமாக அனைத்து பாதுகாப்பு பிரதானிகளையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து நடவடிக்கை நிலையத்தை அங்கிருந்து செயற்படுத்தினேன்.

2022 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி பாதுகாப்பு செயலாளர் , முப்படைத் தளபதிகள் , பொலிஸ்மா அதிபர், அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் இந்த நிலையத்தில் இருந்தனர். எனினும், மக்கள் கொழும்பிற்கு வருவதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமற்போனது.

அனைத்து பிரவேச மார்க்கங்களையும் தடுப்பதனூடாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பிற்கு வருவதை தடுப்பதே அரசாங்கத்தின் திட்டமாக இருந்தது. எனினும், இத்தகைய வீதித் தடைகள் எந்த ஒரு இடத்திலும் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் எவ்வித இடையூறும் இன்றி ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்தனர்.

நான் பதவி விலகும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருந்த எரிபொருள், எரிவாயு பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

மூழ்கும் கப்பலிலிருந்து நான் தனியாக தப்பிச் சென்றதாக ஒரு சில குழுவினர் கூறினாலும் நான் இராஜி

தொடர்ச்சி ▼



# சர்வதேச, உள்நாட்டு சதிகளை எதிர்கொள்ள முடியாமற்போனது

தொடர்ச்சி▲

னாமா செய்யும்போது இலங்கை ஒருபோதும் மூழ்கிக்கொண்டிருக்க வில்லை. 2022 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் என்னை ஆட்சி யிலிருந்து அகற்றுவதற்காக நாடு பெருந்தொற்றிலிருந்து மீள்வதற்கு ஆரம்பித்திருந்த சந்தர்ப்பத்தில் மூலோபாய ரீதியில் முன்னெடுக்கப் பட்ட சர்வதேச, உள்நாட்டு சதியை எதிர்கொள்ள என்னால் முடியாமற் போனது. நான் இன்னும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் நீடிப்பதற்காக ஒரு உயிரையேனும் இழப்பது அர்த்த மற்ற செயலாக இருந்தது.

“2022ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதியன்று அலரிமாளிகை ஆக்கிரமிக்கப்பட்டதையடுத்து, அனைத்து பாதுகாப்புத் தலைவர்க ளையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்வதில் முன்னெச்சரிக் கையாக இருந்தேன்.

2022 ஜூலை 9 காலை 8.00 மணிக்கு, மேல் மாகாணத்தின் சில பகுதிகளில் விதிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. இத னால் போராட்டக்காரர்கள் ஜனாதி பதி செயலகம், மாளிகைக்கு முன்பாக திரள ஆரம்பித்தனர்.

இதன்பின்னர் சுமார் 10.30 அள வில் பாதுகாப்புச் செயலாளரும் படைத் தளபதிகளும், என்னை வளாகத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தினார்கள்.

ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் குழுவொன்றும் கூடியிருந்தது. இதனால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையால் முன்னெச்சரிக்கையாக சில அத்தி யாவசிய பொருள்களுடன் நாங்கள் வாகனத்தில் ஏறி பின்வாயில் ஊடாக கடற்படை முகாமுக்குச் சென்றோம்.

மறுபுறம் முன்வாயிலினூடாக நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதி பதி மாளிகையை முற்றுகையிட்டனர்.

அருகிலிருந்த கடற்படை முகா மிற்குள் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கடற்படைத் தளப தியே மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ரணில் விக்கிரம சிங்கவின் வீட்டில் ரணிலுடன் அவசரப் பேச்சுகளை முன்னெடுத்துக்கொண்டி ருந்த பஸில் ராஜபக்ஷவும் எங்களுடன் இணைந்து கொண்டார்.

கொழும்பு துறைமுகத்தை விட்டு வெளியேறிய பின்னர் திருகோண மலை சென்று கடற்படை தளத்தில் அன்றைய இரவைக் கழித்து மறு நாள் (ஜூலை 11) ஹெலிக்கொப்டரில் கட்டுநாயக்க விமானப்படைத் தளத் துக்கு வந்து இரண்டாவது இரவைக் கழித்தோம்.

அடுத்த நாள் இரவு (12 ஜூலை) மாலைத்தீவு சென்று விடுதியொன்றில் தங்கியிருந்தேன். பின்னர் அங்கிருந்து சிங்கப்பூர் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாலைத்தீவு அர சாங்கம் மேற்கொண்டது.

நான் வெளிநாட்டில் இருந்ததால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்தேன். அரசியல் கட்சித் தலைவர்கள் என்னிடம் விடுத்த கோரிக்கைக்கு மதிப்பளித்து ஜனாதிபதி பதவியிருந்து விலகினேன்.

நாட்டில் சட்ட ஒழுங்கை மீட்டெடுக்கும் திறன் கொண்ட பிரதமரிடம் ஜனாதிபதி பதவியை வழங்குவதற்கு தீர்மானித்து ரணில் விக்கிரமசிங்கவிடம் அந்தப் பொறுப்பை வழங்கினேன்.

புதிய அரசாங்கம் பதவியேற்கும் வரை தாம் பதவியில் இருப்பார் என ரணில் விக்கிரமசிங்க என்னிடம் தெரி வித்திருந்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் முற்று கையை அடுத்து ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் சிலர் ஜனாதிபதிப் பதவி யிலிருந்து விலகுமாறு கோரி எனக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

கடிதத்தில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் சன்ன ஜயசுமன, கலா நிதி நாலக கொடஹேவா, பேராசிரியர் சரித ஹேரத், வசந்த யாப்பா பண்டார மற்றும் டிலான் பெரேரா உட்பட பலர் கையொப்பமிட்டிருந்தனர்.

இதன் பின்னர் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி நான் பதவி விலகினேன்.

நான் பதவி விலகியமையைச்சியடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடா ளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசி யல் கட்சிகளின் தலைவர்களின் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார் என்ப துடன், கட்சித் தலைவர்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்பதாக நான் கூறியிருந்தேன். அதன் பிரகாரமே பதவி விலகினேன்.” என கோட்டாபய தமது நூலில் விரித்துள்ளார்.

# கொரியாவில் வேலைவாய்ப்பு மோசடி: நடிகை தமிதா சந்தேக நபராகப் பதிவு



கொரியாவில் வேலை பெற்றுத் தரு வதாகக் கூறி 30 லட்சம் ரூபாவுக்கு மேல் மோசடி செய்த வழக்கில் நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் சந் தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை பிரதான நீதிவான் திலின கமகேவிடம் தெரிவித்துள்ளது.

இருவருக்கும் எதிராக போதிய சாட்சி யங்கள் இருந்தால் மாத்திரம் சந்தேக நபர்களாக பெயரிடுமாறு நீதிவான் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம், குற்றப் புலனாய்வு திணைக்களம், இவர்களைச் சந்தேக நபர்களாக பெயரிட முடியும் என நீதவானிடம் தெரிவித்தது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவ தால் தமிதா அபேரத்னவுக்கும் அவ ரது கணவருக்கும் தேவையான பிணையை வழங்குமாறு சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் கோரியிருந்த நிலையில் நீதிமன்றில் எழுத்து மூலம் அக்கோரிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.03.2024




இன்றைய நாள் பரபரப்பாக காணப் படும். இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் செயல்திறனுக்கு நல்ல பெயரெடுப்பீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது உங்கள் தனித்திறமையை வெளிப் படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் உண்மையான அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந் துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பணம் அதிக அளவில் சேர்க்க இயலும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நன்மையான பலன்கள் கிடைக்கும். இன்று நீங்கள் பரபரப்பாக காணப்படுவீர்கள். இன்று உங்கள் செயல்களை புத்திசாலித் தனமாக ஆற்ற வேண்டும்.

உங்களுள் மறைந்திருக்கும் திறமை களை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகு வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வைப் பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவை களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களை நீங்கள் உற்சாக மாக வைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பிறரை மகிழ்விக்க முயற்சி செய்வீர்கள். உங்க ளை விதியை நீங்கள் ஏற்றுக் கொள்வ தன் மூலம் சிறப்பாகவும் நம்பிக்கை யுடனும் உணர்வீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம்நன்மை பெறலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும்.அது உங்க ளுக்கு கவலை அளிக்கும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும்.

மகிழ்ச்சியற்ற உணர்வு காரணமாக உறவில் திருப்தி யின்மை காணப்படும். நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். பாதக மான விளைவுகள் ஏற்படாமல் இருக்க பண விஷயத் தில் முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவேண்டியது அவசியம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. எல்லா விஷயத் திலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீங்கள் அதிகமாக உணர்ச்சி வசப்படு வீர்கள். இதனைத் தவிர்க்கத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

பணியிடத்தில் சக பணியாளர்களால் சில தொல்லை கள் ஏற்படும். பணிகளை மேற்கொள்ளும் போது பொறுமை அவசியம்.

தொடர்பாடலில் உள்ள இடைவெளி காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் எதிரெதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பீர்கள்.

பணப்புழக்கம் சிறிது ஏமாற்றம் அளிக்கும். அதிகரிக் கும் செலவுகள் காரணமாக கடன் வாங்க நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமை களை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக் கும். சில முக்கிய முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள். அனைத்து விதத்திலும் மகிழ்ச்சி காணப்படும். உங்கள் செயல் களில் தன்னம்பிக்கை காணப்படும்.

உங்கள் திறமையின் மீதிருக்கும் நம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் நீங்கள் விரைவாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இதன் மூலம் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு ஆளாவீர் கள்.

பூர்வீகச் சொத்து மூலம் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பில் கணிசமான தொகை சேரும்.

நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் மற்றும் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் விருப்பங்கள் நிறைவேறு வதற்கு சாதகமான நாளாக இன்று காணப்படாது. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்த்தல் அல்லது தள்ளிப் போடுதல் நல்லது. பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவும். உணர்ச்சி வசப்பட வேண்டாம்.

உங்களின் செயல்திறனுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்காது. நீங்கள் பணியிடத்தில் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் நல்லிணக்கம் காண நீங்கள் அனுசர னையான போக்கு மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது. வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.




இன்றைய நாள் ஏற்ற இறக்கத் துடன் காணப்படும். உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். நீங்கள் பல சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

அதிக பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். என்றாலும் உங்கள் திறமை காரணமாக உங்கள் பணிகளை செவ்வனே ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வுகளை தவிர்ப் பது நல்லது.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

அதிக வேலை காரணமாக சோர்வு காணப்படும். தலை வலி ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.03.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் வளர்ச்சி குறித்த முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். புதிய மனிதர்களை சந்தித்து புதிய அனுபவம் பெறுவீர்கள். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் இனிமையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையின் உணர்வை புரிந்து கொண்டு அதன்படி நடந்து கொள்வீர்கள்.

பண வரவு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும். கையிலிருக்கும் பணம் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. அதிர்ஷ்டத்தை விட சுய முயற்சியை சார்ந்து செயல் பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். ஓய்வெடுக்கச் சிறிது நேரமே கிடைக்கும். பணிகளை திட்டமிட்டு அதன்படி ஆற்றவும்.

நீங்கள் சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலை அளிக்கும்.

அமைதியின்மை காரணமாக மனதில் பதற்றம் காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்க உகந்த நாள் அல்ல. இன்றைய சவால்களைத் திறமையுடன் சமாளிக்க பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் கவனமுடன் பணியாற்ற வேண்டும். சில தடைகள் காணப்படும். அதனால் நேரம் கூட செலவாகும். சுமூகமான சூழ்நிலை காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் தனிப்பட்ட பிரச்சினை ஒன்று குறித்து உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கருத்து வேறுபாடு காரணமாக உபயோகமற்ற பேச்சுக் காணப்படும். எனவே கருத்து வேறுபாட்டை நீக்கி பரஸ்பரம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். அதிக செலவுகள் சுமையாக இருக்கும்.




இன்று சற்று மந்தமாக காணப்படும். உற்சாகமான ஆற்றல் நிறைந்த போக்கு உதவிகரமாக இருக்கும். விளைவுகளை எதிர்பார்க்காமல் செயல்களை செய்வதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகப் பணிகள் காணப்படும். சில சௌகரியங்களை நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். இது உங்களுக்குச் சிறிது கவலை அளிக்கும்.

வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்வீர்கள். அதனால் செலவுகள் அதிகரிக்கும். நெருங்கிய உறவினர்களின் நலனுக்காக பணம் செலவு செய்ய நேரலாம்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# ‘வடக்கின் பெரும் போர்’ தொடங்கியது



(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்ட போட்டி நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

117 ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டி வழமை போல இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகின. ஆட்டம் தொடர்ந்து இன்றும் நாளையும் என மூன்று நாள்கள் நடைபெறும்.

நேசகுமார் எபனேசர் ஜெஷில் தலைமையிலான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் நிசாந்தன் அஜய் தலைமையிலான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் களமிறங்குகின்றன.

போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இரண்டு கல்லூரி கீதங்களுடன் தொடங்கியது. இரண்டு கல்லூரி அணி வீரர்களும் கைலாகு கொடுத்து அறிமுகப்படுத்திக் கொண்டனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து களமிறங்கியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 56.4 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் அணி சார்பில் சயந்தன் 55 ஓட்டங்களையும், நியூட்டன் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி சார்பில் கவிசன் 5 விக்கெட்டுகளையும், மாதுளன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு தனது முதலாம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி 30.5 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றபோது முதலாம்நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது. அணி சார்பில் அபியோசுவாந்த் 40 ஓட்டங்களையும் சச்சின் கணபதி 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி சார்பில் அனுஷாந்த், முரளிதிசோன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

ஆட்டம் மீண்டும் இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.












# சிவபெருமானை மனதில் நினைத்தால் தீராத பாவங்களும் பிணிகளும் தீரும்...!

## இன்று வெள்ளிக்கிழமை (08) மஹா சிவராத்திரி



**நடராஜன் மிருணாளினி**

இன்று மஹா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தின நாள் சிவராத்திரி என்று சிவன் கோயில்களில் சிறப்பு ஆராதனை நடைபெறும். மாசி மாதம் வரும் அமாவாசைக்கு முதல் நாள் மஹா சிவராத்திரி என வருடம் தோறும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பாவம் செய்யாத மனிதர் என்று உலகில் யாரும் இல்லை. அறிந்தோ, அறியாமலோ அனுதினமும் பாவக்கணக்குகளை ஏற்றிக் கொண்டே போகிறோம். எறும்பு, ஈ, கொசு தூசு துரும்பு என எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன். அவற்றுக்கு நாம் அறியாமலேயே துன்பம் கொடுக்கும் போது, நம் பாவக் கணக்கும் சேர்ந்துவிடுகிறது. அவற்றைக் களைய இறைவன் நமக்கு பல வாய்ப்புகளையும் அளித்திருக்கிறார்.

புண்ணிய ஸ்தலங்களுக்கு புனித யாத்திரை, புனித நீராடல், மகாமகம் நீராடல், கங்கோத்திரி, யமுனோத்ரி போன்ற தீர்த்த யாத்திரைகள் எல்லாம் அதற்கு உதவுவதுதான். அதற்காக உயிரினங்களை துன்புறுத்திவிட்டு புனித நீராடலில் ஈடுபட்டால் பாவம் கழிந்துவிடும் என்று அர்த்தம் இல்லை. இவ்வுலகில் அனைத்து உயிர்களுக்கும் உயிர்வாழ உரிமை உண்டு என்ற புரிதலே அவசியம். இனியாவது பாவங்கள் செய்யக் கூடாது என்று சங்கல்பம் எடுப்பதும் முக்கியம். அப்படி, பாவக் கணக்குகளை எல்லாம் மூட்டைக் கட்டிவிட்டு, புண்ணியங்களைச் சேர்த்துக் கொள்ளும் அற்புதமான நாள்தான் சிவராத்திரி.

### சிவராத்திரியின் சிறப்புகள்

சிவராத்திரிக்கும் மற்ற விழாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டு. இறைவனின் அவதாரங்களை மையப்படுத்தி கிருஷ்ண ஜயந்தி, ராமநவமி, அனுமன் ஜயந்தி, விநாயகர் சதுர்த்தி, சங்கரர் ஜயந்தி என விழாக்கள் உள்ளன. ஆனால், சிவபெருமான் பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற்பட்டவர் என்பதால், அவருக்கு ஜயந்தி என்பது கிடையாது. மாசி மாதம், தேய்பிறை சதுர்த்தசிதான் (24 ஆம் நாள்) சிவராத்திரி. அனைத்துக்கும் ஆதாரமான சிவன், உயிர்களைப்

தொடர்ச்சி ▼

# சிவபெருமானை மனதில் நினைத்தால் தீராத பாவங்களும் பிணிகளும் தீரும்...!

தொடர்ச்சி▲

படைத்ததும், ஒடுக்கியதும் (தனக்குள் ஐக்கியப் படுத்தியது) இந்த நாளில்தான். 'லயக்ரம ஸ்ருஷ்டி தினம்' என்கின்றன சாஸ்திரங்கள். 'லயம்' என்றால் 'ஒடுக்குதல்', 'ஸ்ருஷ்டி' என்றால் 'படைத்தல்'. அதாவது, படைத்தலுக்கும், அழித்தலுக்கும் ஆதாரமான இறைவனுக்கான விழா இது.

எந்த ஓர் உயிருக்கும் ஆணவ குணம் சிறிதேனும் இருக்கும். அதற்கு தேவாதி தேவர்களும் விலக்கல்ல. தங்களின் ஆணவ குணம் அடக்கப்பட, அவர்கள் சிவபெருமானை வணங்கும் நாள் சிவராத்திரிதான். அந்த நாளின், மூன்றாம் காலத்தில் சிவனாரை வழிபட்டால் எப்பேர்பட்ட பாவங்கள் செய்திருந்தாலும் விட்டு விலகிப் போகும். அதாவது, தன்னால் ஒதுக்கப்பட்ட, தான் ஏற்றுக்கொள்ளாத விஷயங்களைக் கூட சிவபெருமானார் அந்த நேரத்தில் ஏற்றுக்கொண்டு, மன்னித்து அருள்புரிவாராம். அந்த அளவுக்கு மகத்துவம் மிக்க நேரம் அது.

அல்லல் என்செயும் அருவினை என்செயும் தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும் தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே. – அப்பர் சுவாமிகள்.

பஞ்சமா பாவங்கள் எனச் சொல்லப்படும் ஐந்து விதமான பாவங்கள் கூட அச்சமயத்தில் மன்னிக்கப்படுமாம்.

அதாவது கொலை, கொள்ளை, பலாத்காரம், பொய் பேசுதல், ஏமாற்றுதல் ஆகிய பாவங்கள் மன்னிக்கப்படுமாம். எனவேதான், அந்த நாளில் சிவாலயங்களுக்குச் சென்று இறைவனைத் தொழ நம் முன்னோர்கள் அறிவுறுத்தினர். அது, நிறைந்த புண்ணியத்தையும் நமக்குத் தரும்.

மூன்றாம் காலம் (நள்ளிரவு) என்பது தீட்டுக்களைக் கூட விலக்கி வைக்கும் நேரம். எனவேதான், சிவபூஜையில் பயன்படுத்தாத 'தாழம்பூ' அந்த ஒரு தருணத்தில் மட்டும் பூஜைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பூலோக உயிர்கள் மட்டுமின்றி தேவர்கள், கிங்கரர்கள், பூதகணங்கள் சுவாமியை ஆராதிக்கும் தினமும் அதுதான் என்பது ஐதீகம். மேலும் இந்த தினம் குற்றங்களைப் போக்கும் தினம் என்பதால், சிவனைச் சரணடைந்து, அடுத்த பிறப்பு என ஒன்று வேண்டாம். இந்தப் பிறப்போடு மோட்சகதி பெற வேண்டும் என்கிற வேண்டுதலை முன்வைத்து வணங்க வேண்டும்.

## சிவராத்திரியின் வரலாறு

சிவராத்திரி கொண்டாட்டத்தின் பின்னணியில் பல கதைகள் சொல்லப்படுகிறன. வில்வ மரத்தின் மேல் இருந்த குரங்கு ஒன்று, ஒரு சந்தர்ப்பத்தில் மரத்தில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே வீசியது. ஓர் இரவு முழுதும் அது அவ்வாறு செய்தது. அந்த மரத்தினடியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. யதார்த்தமாக ஒரு வில்வ இலை கீழேயிருந்த சிவன் மீது விழ, அதுவே அவருக்கு அர்ச்சனையானது. அதனால், அகமகிழ்ந்த சிவனார், அவரை அடுத்த பிறப்பில் சக்கரவர்த்தியாக அவதரிக்கச் செய்தார். அவரே, முசுகுந்தச் சக்கர வர்த்தி. மன்னரான பின்னும், சிவ பக்தனாக இருந்து, இந்திரன் பூஜித்த விடங்க லிங்கத்தைப் பெற்று சிவனின் அருள் பெற்றார். குரங்கு வடிவில் இருந்த மன்னன் வரலாறு, கயிலாயத்தில் நடந்ததாகவும், காட்டில் வேடன் ஒருவனிடமிருந்து தப்பி காட்டில் இருந்தபோது இவ்வாறு செய்ததாகவும் இரு வேறு புராணங்கள் சொல்லப்படுகின்றன.

திருவண்ணாமலையின் தல வரலாறு நூலில் அடி முடி காண முடியாதபடி உயர்ந்த சிவன், 'லிங்கோத்பவர்' வடிவம் எடுத்து பக்தர்களை உணர வைத்த நாள் சிவராத்திரி என காணப்படுகிறது. சிவராத்திரியை 'லிங்கோத்பவ காலம்' என்றும் சொல்வர். 'மகாநிசி காலம்' (நள்ளிரவுக்கு முன்னும், பின்னுமான ஐந்து நிமிடங்கள். அதாவது, நள்ளிரவு 11.55 – 12.05 வரை) என்று சாஸ்திரங்கள் சொல்லும் நள்ளிரவு நேரத்தில், சிவனை வழிபடுவது பல நன்மைகளைத் தரும்.

சிவராத்திரி, நான்கு காலங்களிலும் நான்கு விதமான அபிஷேகங்கள் சிவனாருக்குச் செய்யப்படும். முதல் கால பூஜையில் பஞ்சகவ்யம் இரண்டாம் காலத்தில் பால், பஞ்சாமிர்தம் மூன்றாம் காலத்தில் பழச்சாறுகள், நான்காம் காலத்தில் சந்தன அபிஷேகம் செய்வது விசேஷம்.

சிவராத்திரி அன்று எல்லா சிவாலயங்களிலும் உள்ள சிவபெருமானை வழிபடுவது புண்ணியத்தைத் தரும். ஆனாலும், சிவராத்திரியின் மகிமையால் உண்டான சப்தவிடங்கத் தலங்கள், பன்னிரு ஜோதிலிங்கத் தலங்கள், பஞ்ச சபைகள், பஞ்சபூத தலங்கள், பஞ்ச ஆரண்ய தலங்களுக்குச் சென்று வழிபடுவது விசேஷம்.

## சிவராத்திரி விரத முறை

சிவராத்திரிக்கு கண் விழிப்பது ஏன்? சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும். நினைத்த காரியம் நடக்கும்.

விரதம் கடைப்பிடிப்போர் முதல் நாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் காலையில் குளித்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரத்தை நிறைவு செய்தல் வேண்டும். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும்.

அதன் பின் உபதேசம் தந்த குருவைப் பூஜை செய்து விட்டு, உடைகள் மற்றும் உணவை அந்தணர்க்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

சிவ ராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும்.

இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக் கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம்.

சிவராத்திரியன்று அதிகாலை எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து சிறப்பாக வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவதும், நாவினுக்கருங்கலம் ஆனதும், பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றருப்பது மான இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை கூறி பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம். நாள் முழுவதும் இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

முடிந்தவரையில் வில்வ இலைகளால் சிவனாரை அர்ச்சனை செய்ய வேண்டும். வில்வ அர்ச்சனை அவருக்கு உகந்தது என்பதால், அதனையே பிரசாதமாகப் பெற்றுச் சென்று வீட்டில் வைத்தால் 'சுபிட்சம்' உண்டாகும். இரவும் கண் விழித்திருந்து, சிவனாரை மனதில் தியானிக்க வேண்டும். தேவாரம், திருவாசகப் பதிகங்களை பாராயணம் செய்து அவரை வழிபட வேண்டும். மறுநாள் காலையிலும் கண் விழித்திருந்து, மாலை ஏழு மணிக்குமேல் உறங்கச்செல்லலாம். முடியாதவர்கள், மதிய உணவுக்குப் பிறகு உறங்கிக் கொள்ள சாஸ்திரம் அனுமதிக்கிறது. சிவனருளைப் பெற ஆண்டுக்கு ஒருநாள் வரும் மஹாசிவராத்திரியன்று சிவபெருமானை மனதில் நினைத்துத் தொழுவோம். தீராத பாவங்களும் பிணிகளும் தீர்ந்து, அவரின் பரிபூரண அருள் பெற்று வாழ்வில் உய்வோம்.